கலை நிலயம்

V. 2 NO. 33 22 Apr 1959

JL
[illegible]211, N28KN
N29.2.33
189068

## வர்த்தமானம்

ஸர். டி. சதாசிவ ஐயர்:—மைலாப்பூர் கிளப்பில், காலஞ்சென்ற ஸர். டி. சதாசிவ ஐயர் உருவப்படம் நீதிபதி ஸர். குமாரஸ்வாமி சாஸ்திரியாரால் திறந்து வைக்கப்பட்டது. பல பிரபலகனவான்கள் இத்திறப்பு விழாவிற்கு வந்திருந்தனர்.

***

கவர்னருக்கு விருந்து:—ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியார், ஆக்டிங் கவர்னருக்குச் சென்றவாரம் ஒரு விருந்தளித்தார். சென்னையிலுள்ள பிரபல கனவான்களும் நீதிபதிகளும் விருந்திற்கு வந்திருந்தனர். விருந்து சிறப்பாக நடந்தது.

***

சிங்கப்பூர் கடற்படை:—சிங்கப்பூரில் கப்பல்படை ஒன்றை ஸ்தாபிப்பதற்கென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒரு மிதக்கும் துறைமுகத்தைக் கட்டிமுடித்தனர். ஆகஸ்டுமாதம் 15ந்தேதி மலாய் நாட்டுக் கவர்னர் இந்தத் துறைமுகத்தைத் திறந்து வைத்தார் என்று சிங்கப்பூர் செய்தி கூறுகிறது.

***

நன்னிலம் தாலுக்கா போர்ட்:—நன்னிலம் தாலுக்கா போர்டார் தலைவரைத் தெரிந்தெடுப்பதற்காகக் கூட்டிய கூட்டத்தில், போட்டியில்லாமல் ஸ்ரீ. மருதவனம் பிள்ளை மீண்டும் தலைவர் பதவிபெற்றார் என்று தெரிகிறது.

***

சுதேசப் பொருட்காட்சி:-பூனாவில் சுதேசியப் பொருட்காட்சிச்சாலை செப்டம்பர்மாதம்திறந்துவைக்கப்படுமென்றும், இக்காட்சிச்சாலையில் சுதேசியப்பொருள் எல்லாம் சேகரிக்கப்பட்டுள்ளனவென்றும் தெரிகின்றன. இக்காட்சிச்சாலை நிர்வாகஸ்தர் சுதேசக் கைத்தொழில் ஊக்கத்தை வளர்ப்பதற்கென்றே இக்காட்சி ஏற்பாடு செய்துள்ளாராம்.

***

காந்தி அடிகள்:—காந்தி அடிகள் சிறிது நாட்களாக வயிர்கடுப்பு நோயால் பாதிக்கப் பட்டுள்ளார் என்றும், ஆகவே சமைக்காமல் புசித்துவந்த உணவு முறையைஅவர் விட்டுவிட்டார்என்றும்தெரிகின்றது. உடம்பு குணமடைந்த பிறகு இந்த நவதானிய உணவை மறுபடியும் பரிக்ஷிப்பாரோ யாதோ தெரியவில்லை. டாக்டர்கள் அவருக்குச் சிகிச்சை செய்து வருகின்றார்களாம்.

***

கார்ப்பொரேஷன் தேர்தல்:-சென்னைக் கார்ப்பொரேஷன் தேர்தலில் நுங்கம் பாக்கத்திற்கு ராவ்பகதூர் பி.ரங்கநாதம் செட்டியாரும், சேப்பாக்கத்திற்கு டாக்டர் வி நடேசமுதலியாரும்,கொருக்குப்பேட்டைக்கு சஜ்ஜா முனிசாமி நாயுடுவும், ஹார்பர் டிவிஷனுக்குப் பஷீர்ஆமத்ஸையித்தும், ராயப்பேட்டைக்குத் திவான் பகதூர் நாராயணசாமி செட்டியாரும் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஹார்பர் டிவிஷன் தவிர மற்ற விடங்களில் ஜஸ்டிஸ் கட்சியினரே தெரிந்தெடுக்கப்பட்டனர்.

***

தமிழ் மாகாண மஹாநாடு:—ஸ்ரீ வல்லபாய் பட்டேல் தாம் தலைமை வகிக்க முடியாதெனக்கூறியதின் மேல் மஹாநாடு கூடும் தேதி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. சென்னைக் காங்கிரஸ் கமிட்டி முழுவிடுதலையே காங்கிரஸின் நோக்கமென்று தீர்மானம் செய்ததை ஒட்டியே ஸ்ரீபட்டேல் தலைவர்பதவி யேற்க மறுக்கின்றார். பட்டேலையே தலைமை வகிக்கச்செய்யப் பலர் முயன்று வருகின்றனர். இனிமேல் மஹாநாடு கூடும் தேதி அறிவிக்கப்படும் என்று தெரிகின்றது.

***

சர்வகலாசாலை:—சென்றவாரம் நடந்த சென்னைச் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் லார்ட்பிஷப் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்:—"முன்காலத்தில் விஷயங்களின் உண்மைத்தன்மை அறிய முயலுதலே சர்வகலாசாலையின் நோக்கமாக விருந்தது. பண்டை இந்தியாவில்ஆசிரியர்கள் மாணவர்களை இவ்வழியிலே தான் பயிற்றிவைத்தனர். இத்தகைய பயிற்சிதான் பண்டை இந்தியாவில் மகரிஷிகளையும் ஞானிகளையும் வளர்த்து வந்தது. ஆகவே மாணவர்கள் கல்விப் பயிற்சி பெறுங்காலையில், பொது இயக்கங்களில் தலையிடுதல் நல் வளர்ச்சிக் குரியதாகாது. இக்காலநிலைக்கேற்றவாறு மாணவர்கள் மனித வாழ்க்கைக்கு நலம் தரவல்ல எல்லாத் துறைகளிலும் பயிற்சிபெற்று, பின்னர்தான் பொதுநல வேலையில் தலையிடவேண்டும்.

***

ஸ்ரீமான் சிந்தாமணி:—தற்காலநிலைமையைப்பற்றிக் கான்பூரில் ஸ்ரீமான் சிந்தாமணி செய்த பிரசங்கம் வருமாறு:—சட்டசபைக்கும் இராஜப் பிரதிநிதிக்கும் அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் புதிய விதமாக வியாக்கியானம் செய்யப்படுகின்றன. இத்தகைய வியாக்கியானம் ஜன உரிமையைப் பாதிக்கும். 1919-ம் வருஷத்துச் சீர்திருத்தச் சட்டத்தின் நோக்கம் முற்றப்பெறுது போகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தொழிற் கட்சியினிடம் முழுநம்பிக்கையும் வைப்பதில் பயனில்லை. ராம்ஸே மாக்டொனல்டு இந்தியா விஷயமாய் நல்ல எண்ணம் கொண்டிருக்கலாம். என்றாலும் சைமன் கமிஷனுக்கு ஆதரவுதந்த அவரும் அவரது நண்பர்களும் சைமன் கமிஷன்முடிவிற்கு விரோதமாக ஒன்றும் செய்யார். இதுநிற்க, இப்பொழுது இந்திய அரசாங்கத்தார் கையாண்டு வரும்அடக்கு முறைகளை நான் பலமாகக் கண்டிக்கின்றேன். ஸ்ரீராமநந்த சட்டர்ஜியை அரசாங்கத்தார் கைது செய்தது எனக்கு வியப்பைத்தந்தது. அவர் போன்ற நல்லோர்களைக் கைதுசெய்தல் இந்தியர் வெறுப்பிற்குரிய செயலாகும்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— ரு...ய...க் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷ...ரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நு...புள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை ...ணத்தில் ஒரு... விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. ...முதன்மையாய...ணு.
வி. பி. சார்ஜ் வேறு. ...வெப்பேரி, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

**"KALANILAYAM"**

**11, VELLALA STREET.**

**Purasawalkam MADRAS.**

189068

**1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும்** — **கலா நிலயம்** — **செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்**

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5 தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனூர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலஞ் சானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியா[illegible]களும் வந்துள்ளன.

| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | | | |
|---|---|---|---|
| | [illegible]டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | [illegible]ர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| | [illegible] பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

[illegible]ம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N[illegible]ad and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)



KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு ஆகஸ்டு மீ 22உ [No. 33.

பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 641 |
| 2. | அப்பர். (விஸ்தார கவி) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 643 |
| 3. | தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை) | 645 |
| 4. | சிந்தாமணி நீதிச்செய்புள் V. பரமசிவன் | 648 |
| 5. | குலசேகரர் (பேயாழ்வார்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 650 |
| 6. | கம்பராமாயணம் (பூக்கொய் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. | 652 |
| 7. | மலர்வனம்—(காதன் மாதவி) "மதுகரம்" | 655 |
| 8. | கடமை (William Wordsworth) K. இராஜகோபாலன் | 656 |
| 9 | வர்த்தமானம் | 659 |

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்

### கல்சரும் கவிதையும்.

IV

189068

மொழியினதமைப்பு, வருணங்களின் சேர்க்கை, உருவத்தின் திருத்தம், தெய்வ ஆராதனை, தேச ஆசாரம் அரசியல் இல்லறம் துறவுநெறி போன்றவைகளுக் கியன்றவாய்ப் புரியும் செயல்கள், இவையெலாம் கவிதைக்கு முதற்கருவி துணைக்கருவி எனும் இருவித கருவிகளுமாய் நிற்குந் தன்மையை முன்னர்க் கூறினோம். காரிய வாகுபெயர்களாய் இவைகளையே கவிதை யெனினும் அமையும். எனினும், சொற்களை யாப்பிற்குரிய உறுப்புக்களுடன் வரிசைப்படுத்திச் சேர்க்கின்றவொரு சக்தியையே கவிதையெனச் சிறப்பாகக் குறிப்பது கொள்கை. அச்சக்தி, பிறவகை சக்திகளுக்கெல்லாம் ஒரு தனிப்பேரரசு போன்று மன்பதைமனமெனும் விதானநீழலில் மானுட இயற்கையாம் அரியணைமீது வீற்றிருக்கின்றது. நமது உள்ளத்தின் நிலையைச் சார்ந்த உணர்வுகளை, நிறங்கொண்டு படமென்[illegible] உருக்கொண்டு சிலையென்றும் அவயவ அசைவினைக்[illegible]ண்டு நாட்டியமென்றும் ஒலிகொண்டு இசையென்றும், புறத்தே தோற்றுவிக்கலாமாயினும், உணர்வினு லுற்றபொருளைக் காட்டும் திறம் மொழிகளுக்கு இருக்குமளவு மற்றவைகளுக்கு இல்லை. நுண்ணிதின் நுண்ணிதாய் நுழைந்து உணர்வுடன் இணங்குமோர் மென்மையும் வன்மையும் மொழிகளுக்கே மிகுதியும் உள. தம்மைக் கற்பிக்கின்ற அச்சக்தி நுனிக்குமளவு மொழிகள் வணங்கும்; செலுத்துமளவு செல்லும். கவிதாசக்தி நினைத்தபடியெல்லாம் சொற்கள் சேரவல்லன; பிரித்தபடி யெல்லாம் பிரியவல்லன. ஆதலாற்றான், கவிதாசக்தியின் பூரண நிகழ்ச்சி,கலைகளுள் காவியக்கலையின் மாட்டே தோன்றக் காண்கின்றோம். இது எனெனில், மனோபாவத்தினின்று பிறக்கின்ற மொழிகள் எண்ணங்களுடன் நேராக உறவுகொள்வதற் கியல்வதாக, மற்றக் கலைகளுக்குரிய தூரிகை வர்ணம் சிற்றுளி கல் முதலிய கருவிகளும் அவைகளைப் பயிலும் கல்வியும் தம்முள் ஒன்றுடனொன்று சார்புடைத்தாய், கலைஞனின் உணர்விற்கும் அவ்வுணர்வினைத் தோற்றுவிக்கும் செயலிற்கும் இடையேகிடந்து தொடர்பினைத் தளர்வுறச் செய்கின்றன. ஆதலால், கவிதையானது தன்னைப் பூரணமாய்த் தெரிவித்துக்கொள்ள இயல்வதாகிய காவியக் கலையினிடத்தே பெரிதும் உறவுபாராட்டி வழங்கிவரக் காண்கின்றோம்.

இத்தருணத்தில் ஒரு கேள்வி எழலாம். மனோபாவத்தின் முதன்மையாய கருவி மொழிகள்தாம் எனி

னும் அவை, சீர் தளை தொடை அடி முதலிய உறப்புக்களுடன் செய்யுள்களாக யாக்கப்பெற்றுல்தான் கவிதாசக்திக்கு ஏற்றனவாகுமோ, அல்லது சொல்லும் எழுத்தும் பிறழாமல் உரைநடையில் பயின்றுவரு மொழிகளால் கவிதையின் செயல்காட்ட இயலாதோ என்று ஐயுறவெய்துவோர்க்கு நாம் ஒன்று உரைத்தற்குளது. கவிதையின் தத்துவத்தைக் கருதுங்கால் செய்யுளடியென்றும் வசன நடையென்றும் ஒரு பேதமில்லை. எனினும், ஒரு எண்ணத்தை நாம் உரைக்கப்புகுங்கால், அவ்வெண்ணத்திற்கும் அதை உரைப்பதற் கமைகின்ற சொற்களின் ஓசைக்கும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் உளது. இதுவுமன்றி, எண்ணத்திற்கும் ஓசைக்கும் உள்ள அவ்வுறவானது அவையிரண்டினுலும்குறிக்கப்படும் பொருளையுஞ் சார்ந்துளது. ஒரு பொருள், அப்பொருளால் விளைந்த எண்ணம், அவ்வெண்ணத்தை மொழியும் ஓசை ஆகிய இம்மூன்றிற்குமுள்ள உறவின் வரன்முறையை உய்த்துணர்வது, அப்பொருளைப்பற்றி ஒன்றன்பின் ஒன்ருய் எழுகின்ற எண்ணங்களுக்கு இடையே தொடர்கின்ற முறையை உணர்வதோடு இணங்கியிருக்கக் காண்கின்ருேம். ஆதலாற்ருன், கவிகளாயினோர் தம்சொற்களின் ஒலியைப் பெரும்பாலும் மோனை எதுகைகளாலும் மாத்திரையாலும் ஒருபடித்தா யமைக்கலாகின்ருர். இவ்வொலிகளின் இசையினுல் ஓசை ஊட்டப்பெற்று அடிகள் நடக்கின்றன. அவ்வோசை யில்லையேல் செய்யுள் இல்லை என்பது மாத்திரமன்றிக் கவிதையுமே காணப்பெறவில்லை என்னல் வேண்டும். உற்ற விடயத்தை உரைப்பதற்கு மொழிகள் எத்துணை அவசியமோ அத்துணை அவசியமாம் அவைகளை இசைபட அமைத்தலும். அலதேல், அம்மொழிகளால் எய்த வேண்டிய பயன் இல்லாதுபோம். இதனிற்கோருதாரணங் காட்டுவோம்.

தூதுவந்த வன்னத்தின் மொழிகேட்டுத் தன் தனதடங்களைப்பாராத் தயங்கியதமயந்திக்கு வேறுபாடுற்றதென் றுரைக்கப்பெற்ற விதர்ப்பர்கோன் என்செய்தான். கவிதாசக்தி குறைந்த கவியாயின் புகழேந்தி, அவன் கலங்கிஞனென்றும், புலம்பிஞனென்றும் தன் மகளைக்கண்ணுற அவள்மாட்டு விரைந்தோடிஞனென்றும் பலபடப் பாடியிருப்பார். ஆனுல், மனோபாவமுடையவராதலால் இவரால் சிருஷ்டிக்கப்பட்ட வீமராஜனும் மனோபாவமுடையவனு யிருந்தான். அம்மகள் உற்றநோய் காதலேயெதா னெனக் கருத்துட்கொண்டனன். உற்றதறியா உளம் நடுங்கினர் தோழியர். அதுகேட்ட மன்னனும் காரணகாரிய முறைப்படி உளம் நடுங்கியிருத்தலே வேண்டும். எனினும் இச்செய்தியைக்கேட்டதால் விளைந்த எண்ணங்கள் முற்றிலும் அவன் பகுத்தறிவின் முறைப்படி நடந்து முடிந்துவிடவில்லை. அவன் மனோபாவம் இவ்வெண்ணங்களை வாங்கிக்கொண்டு தன்னுடைய அனுபவத்தையும் அதனோடு சேர்த்துத் தமயந்திக்கு விரைவில் சுயம்வரம் சமைக்கவேண்டுமென்ற எண்ணத்தைப் பிறப்பித்தது. அதனை நிகழ்த்தப் போகின்றுன். ஆதலின், அவன் தமயந்தியின் கன்னிமாடத்தை நோக்கிச் சென்ற செய்தியைச் செப்பும் செய்யுள்,

> கருங்குழலார் செங்கையினுல் வெண்கவரிப் பைங்
> மருங்குலவ வார்முரச மார்ப்ப - நெருங்கு [கால்
> புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
> வரிவளைக்கை நல்லாண் மனை

என அமைந்திருக்கின்றது. நாம் முன் சொன்ன தொன்றும் புகழேந்திப்புலவர் நூலில் வெளிப்படையாக இல்லை. தோழியர் சென்று தேவியிடம் "பொற்ருெடிக்கு வேறுபாடு உண்டு" என்ருர்—வேந்தனுக்கு "மற்றதனைக் கூறினுள் பெற்றகொடி," என இயம்பியதை யடுத்து அரசன் இவ்வித வைபவங்களுடன் புறப்பட்டுவிட்டான் என்று தெரிவிக்கின்ருர் கவி. தமயந்தியின் செய்தியைக் கேள்வியுற்றதால் விதர்ப்பனுடைய மனத்தின்கண் எவ்வகை எண்ணங்கள் விளைந்தனவென்பதையும், அவையிரண்டிற்கு முள்ள உறவையும் எதனுல் நாம் அறியலாகின்ருேம்! இதே விஷயத்தை, "கருமையான கூந்தலையுடைய மாதர்கள் தம் சிவப்பான கையினுல் வெண்சாமரத்தால் வீசும் இளம் காற்றுப் பக்கத்தில் வீசவும்......புக்கான்" என்னும் சொற்களால் வசனநடையில் விளம்புவதாயின், எல்லாம் நமக்கு விபரீதமாகத்தோன்றும். தன்னரும் மகள் நோயுற்றிருக்கின்றனள் என்ருல் விரைந்தங்கு ஏக வேண்டிய தந்தை இவ்வாறு உலாப்போவாஞயின் அவளை என்னென்று வெறுப்பது என்னும் நினைவே நம்பால் எழும். அந்நினை வெழாமற் காத்து, விடயத்திற்கும் அதனை உட்கொண்ட எண்ணத்திற்குமுள்ள வுறவின் மெய்ம்மையை இச்செய்யுளின் மொழிகள் இசைந்துடன் நடக்கின்ற நேர்மையாலும், மெல்லின இடையின எழுத்துக்களின் மிகுதியாலும், தளையினமைதியாலும் தருகின்ற ஓசையே உதவுகின்றது. இன்னபடி அமையவில்லையாயின் விதர்ப்பனதுணர்வு கவியின் மூலமாய்க் காட்டப்பெற்ற தாகாது. காட்டமுயன்ற மொழிகளுமே பழுதடைந்துபோம். ஆதலாற்ருன் ஒரு கவியினது முழுக்கருத்தையும் அதன் பயனேடு பெறவேண்டுமாயின் அதனிற் பயின்றுள சொற்களை அவ்வுருவத்திலேயே அவ்வமைப்பிலேயே பருகுதல் வேண்டும். உப்பு புளி மிளகாய் முதலியன சேர்ந்து ஆவது 'இரஸம்' ஆனுலும், இத்துணை உப்பு இத்துணைப் புளி இத்துணை மிளகாய் என்று தனித்தனி எடுத்துத்தின்று வெந்நீரை உட்கொள்வதால் இரசத்தைப் பருகியவர்க ளாகமாட்டோம்.

கவிதாசக்தியின் தன்மையைக்கண்டோம்; அச்சக்தி தன்னைத் தெரிவித்துக் கொள்வதற்கியன்ற மொழிகள் அமையவல்ல ஆற்றலையுங்கண்டோம். இன்னபடி ஆக்கப்பெற்ற காவியம் பெரும்பாலும் ஒரு கதையை இயம்புகின்ற கருமத்தைக்கொண்டதாயிருக்கின்றது. எனினும் காவியம்வேறு, வெறும் கதை வேறு. காவியமானது, நிரந்தரமாய மெய்ம்மையின்முறைப்படி உயிர் வாழ்க்கையினது முழுமையைத் தோற்றுவிக்கின்றவோர் பிரதிபிம்பமாம். வெறும் கதையொன்று, நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்துவைத்திருக்கும் அட்டவணையேயன்றி வேறன்று. கால தேச வர்த்தமான பேதங்களும், காரணகாரிய இயக்கமு மல்லாமல் அந்நிகழ்ச்சிகள் ஒன்றற்கொன்று வேறெவ்விதச் சம்பந்தமும் பெற்றிருக்கமாட்டா. கவிதையோ, மானுட இயற்கையின் மாருத உருவத்திற் கிணங்கியபடி செயல்களைச் சிருஷ்டிப்பதாம். கதையின் நிகழ்ச்சிகள் ஒருவித சந்தர்ப்பத்திற்கே ஏற்றனவாகு மாகையால் அவை குறையுடையன. ஒருதரம் நிகழ்ந்தவாறே அவை மறுபடி நிகழா. கவிதையோ, உலகமே எந்நாளுளது எவ்வளவுளது, அந்நாள்காறும் அவ்வளவு பரந்ததாயும் நிலைநிற்கவல்லது. மானுட இயற்கையில் இருக்கக்கூடிய



வித்தியாசங்கள் அத்தனையாலும் எழுகின்ற சூழ்ச்சிக்கும் செயலிற்கும் உரிய வித்தினைத் தன்னுள் தங்கப்பெற்றது கவிதை. காலம் செல்லச்செல்லக் கவிதையால் விளக்கமுருத கதையின் அழகும் பயனும் தேய்ந்து அழிந்துபோம். கவிதையின் மேன்மையோ காலத்திற்குக் காலம் புதியபுதிய துறைகளில் தன் வாய்மையை அதிசயமுறத் தோற்றுவிக்கும்.

இராமாயணம் பாரதம் முதலிய கதைகள் இருக்கின்றன; திருவிளையாடற் புராணக் கதைகள் உள. கந்தபுராணத்திலும் மற்றப்புராணங்களிலும் பற்பலநிகழ்ச்சிகள் உரைக்கப் பெற்றிருக்கின்றன. இந்நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துப் பார்ப்போமானுல் அவைகளைச் செப்பிய புலவர்கள் கருதிய பயனை நாம் பெற்றவர்களாகமாட்டோம் விபரீதப் பொருள்படுத்தி வீண்வாதம் செய்வதற்கே அவை உதவும். இக்கதைகளை ஆக்கித்தந்த கவிதாசக்தியுடன் சேர்ந்தே நாம் அவைகளைக் கற்கவேண்டும், அவைகளில் நாம் பயிலவேண்டும். பள்ளிக்கூடச் சிறுவர்க்கு இராமாயண பாரத கதைகளை எடுத்து எழுதித்தருகின்ற அந்த மேலெழுந்த நோக்காகப் படிக்கவேண்டிய புஸ்தகங்களால் (Non-detailed Study books) வருகின்ற ஆபத்தை அறியாதுகெடுகின்ருேம். இராமசரிதையைத்தெரிந்து கொள்வதெனின் முதல்முத லதனை வால்மீகர் கம்பர் போன்ற புலவர் வாய்நின்று அவர் மொழிகளாலேயே, அம்மொழிகளைக்கொண்டு அவர் இசைத்த ஓசையுடனேயே கேட்கவேண்டும். இக்கதைகளின் கவிதையெல்லாம் கழித்துவிட்டுக் கூறுவோர் எழுதுவோர் அனைவரும் நமது நல்வாழ்விற்குக் கூற்றுவர் ஆகின்றனர். கவிதாசக்தியின் சிறப்பெலாம் பெற்றிராதவர் அக்கதைகளின் நிகழ்ச்சிகளைப் பிய்த்தெறிய இயன்றவரேயல்லது, அவைதம் வாய்மையையும் அழகையும் விளம்புதற்கொத்த வாய் அவர்களுக்கேது. காவியக் கதைகளின் சுருக்கமென்று எழுதப்பெற்றுள புஸ்தகங்கள் கறைபரன்களையே நிகர்க்கும்—கவிதையெல்லாம் அரித்துவிட்டுக் கதையை உதிர்த்துவிடுகின்றன. காவியங்களில் வரும் கதைநிகழ்ச்சியை மாத்திரங் கூறுவது அதனழகை அழித்து மழுங்கச் செய்வதாம். அதனுல் உலகிற்குள்ள நற்பயனைக் கொன்று தொலைப்பதாம். இருக்கின்ற அழகைக் கெடுக்கும் வெறுங் கதை; இல்லாத அழகையும் கவிதை கொடுக்கும்.

OFFICE OF THE REGIST[...] 3- [...]N 1929 MADRAS

# அப்பர்

## 5. அப்பர் கவித்திறம்.

### 1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

வித்தாரகவி

கவிக்கு உணவுபோன்ற எழுத்துக்களில்அமுதத்தையுண்டு நஞ்சை விலக்கல் மரபாம். அவ்வெழுத்துக்கள் ஸ்தானம் தசாங்கமாதலால், மலைமுதல் ஆணையீருக வுள்ள தசாங்கங்கள் அப்பர் தேவாரத்தில் எவ்வாறு காணப்படுகின்றன வென்பதை

625ம் பக்கத் தொடர்ச்சி

ஆராய்வோம். திருவாசகத்தில், மணிவாசகப் பெருமான் தசாங்கத்தை வெண்பாக்களால் பதிகம் பாடினுர். அவர், உத்தரகோசமங்கை யூரே ஊராகவும், தென்பாண்டி நாடே நாடாகவும் பாடியதுபோல் சிவபெருமானுறையும் தலமெல்லாம் தன்னூரென்றும் தமிழ்நாடு முழுவதும் நன்னுடாகவும் திருநாவுக்கரசர் பாடுகின்ருர்:—

> " பற்றற்ருர்சேர் பழம்பதியைப்
> பாசூர்நிலாய பவளத்தைச்
> சிற்றம்பலத்தெந் திகழ்கனியைத்
> தீண்டற்கரிய திருவுருவை
> வெற்றியூரில் விரிசுடரை
> விமலர்கோனைத் திரைசூழ்ந்த
> ஒற்றியூரெம் முத்தமனை
> யுள்ளத்துள்ளே வைத்தேனே " என்று

பாவநாசத் திருப்பதிகத்தில் பாடியவர் எல்லா அரிய பெரிய சிவஸ்தலங்களையுங் குறித்துக் காட்டிப் பின்னர்த் திருக்கடைக் காப்பில்,

> " முந்தித்தானே முளைத்தானை
> மூரிவெள்ளே றூர்ந்தானை
> யந்திச்செவ்வான் படியானை
> யரக்கனுற்ற லழித்தானைச்
> சிந்தைவெள்ளப் புனலாட்டிச்
> செஞ்சொன்மாலை யடிசேர்த்தி
> யெந்தைபெம்மா னென்னெம்மா
> னென்பார்பாவ நாசமே "

என்ருர்.

ஆகையால் வாகீசர், ஊர்ப்பற்று நாட்டுப்பற்று முதலிய பற்றறுத்துக் கடவுளை வழிபடும் பதியே ஊரென்றும், * அந்நாடே நாடென்றும்,

> திருக்கோயி லில்லாத திருவி லூரும்
> திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
> பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
> பாங்கினெடு பலதளிக ளில்லா வூரும்
> விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
> விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
> அருப்போடு மலர்பறித்திட் டுண்ணு வூரும்
> அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே
>
> தனித் திருத்தாண்டகம்-5.

என்றும் மொழிந்தாராதலால், அவர் கூறும் தசாங்கம் உலகத்திற்குப் பொதுவாய், யாவரும் ஆமோதிக்

* அது காடாயினும் நாடென்பதற்கு:—

> தண்காட்டச் சந்தனமுந் தவள நீறுந்
> தழையணுகும் குறுங்கொன்றை மாலை சூடிக்
> கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
> கார்மயிலஞ் சாயலார் கலந்து காண
> வெண்காட்டாக் காடங் கிடமா நின்று
> வெரிவீசி யிரவாடு மிறைவர் மேய
> வெண்காடே வெண்காடே யென்பீ ராகில்
> வீடாத வல்வினையை வீட்ட லாமே.
>
> பல்வகைத் திருத்தாண்டகம் 9.

கத்தக்க இலக்கணமமைந்து விளங்கும். இனி அவர் தேவாரவாயிலாய்த் தசாங்கஉதாரணம்காண்போம்:—

மலை.—சிவபெருமானுக்குச் சிறந்த மலை கயிலாயம். இதை முத்தியின் உருவமென்பர். கழுக்குன்றம், முதுக்குன்றம், முதலியன குன்றுகளேயன்றி மலையாகா. எனவே திருநொடித்தான்மலை "ஊழிதோறூழிமுற்றும்" நின்று பிரகாசிப்பது. அதுவே * எல்லாமலைகளுக்கும் மிகவும் சிறந்ததாகும். அதை அப்பர்,

போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
யேற்றிசைக்கு வான்மே லிருந்தாய் போற்றி
யெண்ணு யிரநூறு பேராய் போற்றி
நாற்றிசைக்கு விளக்காய நாதா போற்றி
நான்முகற்கு மாற்கு மரியாய் போற்றி
காற்றிசைக்கும் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

ஸ்ரீ கைலாயத்திருமலை - போற்றித்திருத்தாண்டகம் 9.

நதி:—காசினியில் கங்கைக்குச் சமானமான நதி எங்குமில்லை யென்பர்; ஏனெனின் மகாபுண்ய தீர்த்தமாயிருந்து சகல நோய்களை யறுப்பதுடன், தொன்றுதொட்டுச் சைவரும் வைணவரும் இன்னும் பற்பல மதத்தரும் இது பிறவிப்பிணியையு மறுக்கு மருமருந்தெனக் கொண்டாடுகின்றனர். இது சிவபெருமான் சடையி லிருப்பதென்றால், இதற்கு வேறு பண்பும் வேண்டுமோ? இது கைலைமலையில் உற்பத்தியாவது. இந்நதி பாயுமிடங்கள் யாவும் புண்யபூமியாய்ச்செல்வமல்கும். "மறைவல்ல மாதவனை" காணும் காட்சியில் முதற்காட்சியாய்க் கண்டது கங்கையென்பர், திருநாவுக்கரசு:—

அலைத்தோடு புனற்கங்கை சடையிற் கண்டேன்
அலர்கொன்றைத் தாரணிந்த வாறு கண்டேன்
பலிக்கோடித் திரிவார்கைப் பாம்பு கண்டேன்
பழனம் புகுவாரைப் பகலே கண்டேன்
கலிக்கச்சி மேற்றளியே யிருக்கக் கண்டேன்
கறைமிடறும் கண்டேன் கனலுங் கண்டேன்
வலித்துடுத்த மான்றோ லரையிற் கண்டேன்
மறைவல்ல மாதவனைக் கண்ட வாறே.

திருவினுத் திருத்தாண்டகம் 7.

நாடு:—"நாமார்க்கும் குடியல்லோம்" என்றவருக்கு நாடென்பதேது? எல்லா நாடுகளும் ஒன்றேயாம். ஏனெனில்,

" கேடு மூடிக் கிடந்துண்ணு நாடது
தேடி நீர்திரி யாதே சிவகதி
கூட லாந்திருக் கோளி யீசனைப்
பாடு மின்னிர வோடு பகலுமே "

திருக்கோளிலி-திருக்குறுந்தொகை 9.

என்றவர், தமிழ்நாடுகள் யாவும் நாடாகவும் கொள்வர். ஆயினும் திருவாரூர்தன்னைத் தனிநாடாயும் கொண்டார். இதன் பொருத்தம் அறிஞர் ஆராய்க:—

"அமரர் நாடாளாதே யாரூராண்ட, வயிராவணமே யென்னம்மானே" என்றுமொழிந்த திருவாரூர்த்திருத்தாண்டகத்தில் திருக்கடைக்காப்பில் "திருத்துருத்தி, திருப்பழனம், திருநெய்த்தானம், திருவையா றிடங்கொண்ட செல்வரிந்நாள், அரிப்பெருத்த வெள்ளேற்றை யடரவேறி யப்பனு ரிப்பருவ மாரூராரே" எனக் காண்கின்றோம். இதன்றியும் "நாட்டகத்தே நடைபலவு நவின்றார் போலும்"......"அணியாரூர் திருமூலத்தானனாரே" என்றும் வருகின்றது. பரமனுக்கு இடுகாடே நாடெனினும் பொருந்தும். கச்சிமயானம், கடவூர் மயானம், நாலூர் மயானம் என்பன அமைந்தன காண்க.

ஊர்:—சிவபெருமானுக்கு ஊர் யாது? இதற்கு விடை, அப்பர் க்ஷேத்திரக்கோவை—திருத்தாண்டகப் பதிகமாகும்:—

தில்லைச் சிற்றம்பலமும் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடிக் காவும்
முல்லைப் புறவ முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லிற் றிகழ்சீரார் காளத் தியுங்
கயிலாய நாதனையே காண லாமே.

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல்-வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தா னத்து
நிலவுபெருங் கோயில் பலகண்டாற் றொண்டீர்
கலிவலிமிக் கோனை விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே.

ஆயினும் ஆயிரத்தெட்டுத் திருப்பதிகளென்னும் சிவஸ்தலங்களன்றி ஏனைய தலங்களும் அடியார் வைகப்பெறின் சிவபெருமான் ஊரேயாகும். இதற்குப் பிரமாணம்:—

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்
ஓரூர னல்லனோ ருவம னில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண் ணமு
மவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே

வினாவிடைத் திருத்தாண்டகம் 10.

தார்:— கொன்றைமாலையே சிவபெருமானுக்குச் சிறந்தது. வெள்ளெருக்கு முதலியன அணியினும், "பொன்பொதி மத்தமாலை" என்று சம்பந்தரும் குறிப்பிட்டது கொன்றையேயாம். இதனாலே இவருக்குக் கொன்றைவேந்தன் என்னும் பெயருண்டு.

ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழிற் றோணி புரவர்தங்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே.

திருத்தோணிபுரம் - திருக்குறுந்தொகை 7.

[மணிவாசகப் பெருமான் "தாளி யறுகம் புல்" இவர் தார் என்று திருத்தசாங்கத்தில் மொழிகின்றனராயினும், தேவாரத்தில் அவ்வாறு காட்டப்படவில்லை]

இவுளி:—
யானை } இவ்விரண்டுமாவது நந்தியே யாம்:—

நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிக ளும்மூர்தா னேதோ வென்ன
விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங்க ணெடுங்கடலுள் நின்று தோன்றும்
திரைமோதக் கரையேறிச் சங்க மூரும்
திருவொற்றி யூரென்றா ரீய வாறே.,

திருவொற்றியூர் - திருத்தாண்டகம்.

சுந்தரமூர்த்திநாயனாருக் கனுப்பிய வெள்ளையானை இவரிடமிருப்பினும், "மத்த மாகளி யானை யுரிவை" போர்த்தவராய்ப் புகழப்படுவ ரன்றி, அத்தகைய களிற்றை ஊர்தியா யிவர் வகிக்கவில்லை. இவர் பரிகள் நரிகளே. மணிவாசகப்பெருமான் புரவியைக் காட்டுமிடத்தில் (திருத்தசாங்கத்தில்)

இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
யொப்பாடாச் சீருடையா னூர்வதென்னே—யெப்போதுந்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசை
வான்புரவி யூரு மகிழ்ந்து." என்றனர். [ப்ப

வான்புரவி யென்றது ஞானாகாசமாகிய புரவியென்பர் சிலர். வான் என்னும் அடைமொழியால் காளகண்டர் ஏறும் * "கடியவிடை" யெனினும் பொருந்தும்.

கோடி:—இவர்கொடி இடபக்கொடியே யாம்:—

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளி பாடக்
குறட்பூதங் கூத்தாட நீயு மாடி
வடிவேயு மங்கைதனை வைத்த மைந்தா
மதிலானைக் காவுளாய் மாகா ளத்தாய்
படியேயுங் கடலிலங்கைக் கோமான் றன்னைப்
பருமுடியுந் திரடோளு மடர்த்து கந்த
அடியேவந் தடைந்தடிமையாகப்பெற்றேன்[கேனே
லல்லகண்டங் கொண்டடியே னென்செய்

திருவானைக்கா-திருத்தாண்டகம் 10.

முரசு:—"பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும் பருமிக்க நாதப் பறை" சிவபெருமான் முரசென்பர் மாணிக்கவாசகர். அவ்வாறே அப்பரும்,

(i) பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் வைகு மயலெல்லாம்
இறைவ னெங்கள் பிரானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே.

திருவிடைமருதூர்-திருக்குறுந்தொகை-1

(ii) பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் மல்கி யயலெலாம்
நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே.

திருநின்றியூர்-திருக்குறுந்தொகை 4

ஆணை:—அதாவது ஆக்கினை செலுத்தும் கைக்கொள் படை யாகும். மணிவாசப் பெருமான் இதை "அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும் கழுக்கடை" யென்றார். இதுவே மூவிலை வேலாம்:—

மூவிலைநற் சூலம்வல னேந்தி னானை
மூன்றுசுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடையொன் றேறு வானை
நால்வேத மாறங்க மாயி னானை
ஆவினிலைந் துகந்தானை யமரர் கோவை
யயன்றிருமா லானானை யனலோன் போற்றும்
காவலனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே.

திருக்கஞ்சனூர் - திருத்தாண்டகம் 1

* கயிலாய மலையுள்ளார் காரோ ணத்தார்
கந்தமா தனத்துள்ளார் காளத் தியார்
மயிலாடு துறையுள்ளார் மாகா ளத்தார்
வக்கரையார் சக்கரமாற் கீய்ந்தார் வாய்ந்த
அயில்வாய சூலமுங் காபா லமும்
அமரும் திருக்கரத்த ரானே றேறி
வெயிலாய சோதி விளங்கு நீற்றார்
வீழி மிழலையே மேவி னாரே.

திருவீழிமிழலை - திருத்தாண்டகம் 1.

* திருவொற்றியூர்-திருத்தாண்டகம்-6



# தமிழ்ப் பாடம் 85.

[ அஷ்ட பிரபந்தம். ]

[ 632-வது பக்கத் தொடர்ச்சி ]

## திருவேங்கடமாலை.

பேய்க்குமொரு பேய்போன்று பித்தாய்த் திரிவோர் [க்கும்
வேய்க்குமணி முத்திவரும் வேங்கடமே—வாய்க்க [முதூர்
வண்மைப்பே ராயிரந்தான் மன்னினன் மாவலிபாற்
றண்மைப்பே ராயிரந்தான் சார்பு. 18

பதப்பிரிவு:—பேய்க்கும் ஒரு பேய் போன்று பித்து ஆய் திரிவோர்க்கும் வேய்க்கும் அணி முத்தி வரும்—மணி முத்து இவரும்—வேங்கடமே வாய்க்கு அமுது ஊர் வண்மை பேர் ஆயிரம் தான் மன்னினன் மாவலி பால் தண்மை பேர் ஆய் இரந்தான் சார்பு.

பதவுரை.

பேய்க்கும் - பேய்களுக்கும்
ஒரு - ஒரு
பேய் - பேயை
போன்று - போலத் தோன்றும்
பித்து - பைத்தியம்
ஆய் - ஆகி
திரிவோர்க்கும் - (பக்தியினால் உலகப்பற்றை யெல்லாம்விட்டு) திரிகின்றவர்களுக்கும்
அணி - அழகிய
முத்தி - மோக்ஷமானது
வரும் - வருவதற்கு இடமானதும்;
வேய்க்கும் - மூங்கில்களிலும்
மணி - அழகிய
முத்து - முத்துக்கள்
இவரும் - அடர்ந்திருக்கும்படியானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்,

வாய்க்கு - உரைப்போர் வாயில், அமுதம் - அமுதம்போன்ற இனிமை, ஊர் - தவழ்கின்ற, வண்மை - வளப்பம்பொருந்திய, ஆயிரம் - ஆயிரம், பேர் - திருநாமங்கள், மன்னினன் - பொருந்தினவனும்; மாவலிபால் - மகாபலி சக்கரவர்த்தியினிடத்தில், தண்மை -

குறைந்த, பேர் ஆய் - வாமநன் என்ற பேரை உடையவனாய், இரந்தான் - யாசித்தவனுமான திருமால், சார்பு - சார்ந்திருக்குமிடம்.

விரிவுரை:—பக்திப் பரவசமாகிப் பித்தன்போல் ஒருவன் திரிகின்ற தோற்றத்தைக் கண்ட பேயும் அவனைப் பேயே என்று எண்ணும் என்பது முதலடியின் கருத்து. பேயும் என்பதிலுள்ள உம் என்னும் இடைச்சொல் இழிவுசிறப்புப் பொருளது. திரிவோர்க்கும், வேய்க்கும், என்பதிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன. இந்தப் பாட்டில் அமைந்த சிலேடை பிரிமொழிச் சிலேடை.

வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியும் மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே—தோட்கைவிழ
மாகவந்தனைக்கழித்தார் வாழிலங்கைப் பாதகரை
லோகவந்தனைக்கழித்தா ரூர். 19.

பதப்பிரிவு.—வாழ்க்கை மனை நீத்தவரும் வாள் அரியும் மாது அங்கம் வேள் கைமறந்து இகழும்—மாதங்கம் வேட்கை மறம் திகழும்—வேங்கடமே தோள் கை விழ மா கவந்தனை கழித்தார் வாழ் இலங்கை பாதகரை லோகம் வந்தனைக்கு அழித்தார் ஊர்.

பதவுரை.

மனை வாழ்க்கை - இல்லற வாழ்வை
நீத்தவரும் - விட்டவரும்
மாது - மாதர்களுடைய
அங்கம் - சரீரத்தினது
வேள் - விருப்பத்தை
கைமறந்து - முற்றிலும் மறந்து
இகழும் - அதனை இகழ்வதற்கிடமானதும்;
வாள் - கொடிய
அரியும் சிங்கமும்
மாதங்கம் - யானையை எதிர்க்க வேண்டுமென்ற
வேட்கை - ஆவலுடன்
மறம் - வீரம்
திகழும் - விளங்குவதற்குமிடமானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்,

தோள் - தோளிலிருந்து, கை - கைகள், விழ - விழும்படி, மா - பெரிய, கவந்தனை - கவந்தன் என்னும் அரக்கனை, கழித்தார் - அறுத்தவரும்; இலங்கை - இலங்கையில், வாழ் - வாழ்ந்த, பாதகரை - பாதகர்களை, லோகம் - உலகத்தின், வந்தனைக்கு - நன்றியைப் பெறும்படி, அழித்தார் - அழித்தவருமாகிய திருமால் விரும்பி இருக்கும், ஊர் - ஊராகும்.

விரிவுரை.—கைம்மிகல், கைகூடல் என்ற இடங்களில்போல் கைமறந்து, என்ற இடத்திலும் கை என்பது மிகுதிப்பொருளை உணர்த்துகின்றது. 'மாதங்க வேட்கை மறந்திகழும்' என்பதை 'மாது அங்க வேள் கைமறந்து இகழும்' எனப்பிரித்து மனைவாழ்க்கை விட்டவர்களை ஒட்டிப் பொருள் சொன்னோம். மீண்டும் அதனையே, 'மா தங்கம் வேட்கை மறந்து இகழும்' எனப்பிரித்து 'சிறந்த பொன் ஆசையை மறந்து இகழ்கின்ற நீத்தார்' என்றும் கொள்ளலாம். சிங்கத்தை ஒட்டிப் பொருள் சொல்லும்போது, மாதங்கம் என்பது ஒரு சொல்லாய் யானையைக் குறிக்கும். முன், மறந்து இகழும் என்று பிரித்ததற்குப் பதிலாய் இப்பொழுது மறம் திகழும் எனப்பிரித்து வீரம் விளங்குகின்ற என்று பொருள் கொள்ளவேண்டும்.

வாழரியுஞ் சந்தனந்தோய் மாருதமுந் தாக்குதலால்
வேழ மருப்புகுதும் வேங்கடமே—நீழலமர்
பஞ்சவடி காட்டினன் பாரளப்பான் போலெவர்க்குங்
கஞ்சவடி காட்டினன் காப்பு. 20

பதப்பிரிவு:—வாழ் அரியும் சந்தனம் தோய் மாருதமும் தாக்குதலால் வேழம் மருப்பு உகுதும்—மரு புகுதும்—வேங்கடமே நீழல் அமர் பஞ்சவடி காட்டினன் பார் அளப்பான்போல் எவர்க்கும் கஞ்சம் அடி காட்டினன் காப்பு.

பதவுரை.

வாழ் - அங்கு வாழ்கின்ற
அரி - சிங்கங்கள்
தாக்குதலால் - எதிர்ப்பதினால்
வேழம் - யானைகளது
மருப்பு - தந்தங்கள்
உகுதும் - சிந்துவதற்கு இடமானதும்;
சந்தனம் - சந்தனமரத்தில்
தோய் - பட்ட
மாருதம் - காற்றானது
தாக்குதலால் - தன்மேல் வந்து படுவதால்
வேழம் - மூங்கில்கள்
மரு - வாசனையை
புகுதும் - அடைவதற்கு இடமானதும் ஆய
வேங்கடமே - வேங்கடமலைதான்.

நீழல் - நிழலானது, அமர் - பொருந்திய, பஞ்சவடி - பஞ்சவடி என்னும், காட்டினன் - வனத்தில் தங்கியவனும், பார் - பூமியை, அளப்பான்போல் - அளப்பவனைப்போல், எவர்க்கும் - எவ்வுலகத்திலிருப்பவர்க்கும், கஞ்சம் - தனது தாமரைமலர்போன்ற, அடி - பாதத்தை, காட்டினன் - காட்டியருளியவனுமாகிய திருமால், காப்பு - காக்கின்ற இடம்.

விரிவுரை:—வேழம், என்பது, யானை மூங்கில் என்ற இரண்டு அர்த்தத்திலும் முன்னரே வந்திருக்கின்றது. உகுதும், புகுதும் என்றவற்றிலுள்ள, து என்னும் எழுத்து சாரியை; உகும், புகும் என்று அவை சாரியைஇன்றி நிற்கும்.

மாவலியினிடத்தில் பூமியை அளந்து எடுத்துக்கொள்ள நினைத்தவன்போல் தோன்றினாலும் வாஸ்தவத்தில் திருமாலின் நோக்கம் உலகத்தை அளக்க வேண்டுமென்பது அன்று எனவும், அவ்வாறு அளப்பதை ஒரு நிபமாகவைத்து எல்லா லோகங்களிலிருப்பவரும் தனது தாமரைமலர் போன்ற உள்ளடியின் பெருமையைக்கண்டு உய்யுமாறு அருள்வதே அவன் கருத்து எனவும் கவி மிகவும் சாதுர்யமாகக் கூறுகின்றார். திருமால் தனது திருப்பாதத்தை உயர்த்தியது உலகங்களை அளப்பதற்காகச் செய்த காரியம் என்பது பிரசித்தம். அவ்வாறிருக்கக் கவி அதனை மறுத்துத் திருமால் பாதத்தைத்தூக்கியது அவர்தன்னுடைய தாமரைபோன்ற உள்ளடியை யாவரும் காணும் பொருட்டே என்று கூறுகின்றார். இப்படி, உண்மையா யிருக்குமொன்றை மறைத்து வேறொன்றாகக் கூறுவதை அவனுதி அணி என்பர். இதனிற்குத் தமிழில் ஒழிப்பணி என்பது பெயர். வேறொரு தன்மையைப் புதியதாய்க் கவி தன்னுடைய சாமர்த்தியத்தினால் ஏற்றிவைக்கும் பொருட்டு அதன் இயற்கையாய தன்மையை முதலில் ஒழித்து விடவேண்டி யிருத்த



லால் இவ்வணிக்கு ஒழிப்பணி என்னும் பெயர் வந்தது. திருமால் மாவலிபால் பெற்ற மண்ணை அளந்து கொள்வதற்குப் பாதத்தை உயர்த்தினார். இதுதான் அச்செய்கையின் இயற்கையான தன்மையாம், உண்மையுமாம். ஆயினும், "பார் அளப்பான் போல்" என்ற வாசகத்தால், அவ்வுண்மை ஒழிக்கப்பட்டது. "பாரளக்க என்பது பாவனையே, நிசமோ வேறு" என்னுங் குறிப்புப் 'போல்' என்னுமச் சொல்லில் அடங்கியிருப்பதை எளிதில் உணரலாம். இவ்விதம் உண்மையான தன்மையை ஒழித்தது எதற்காகவெனின், பாதத்தைத் தூக்கியதற்கு வேறுபொருள் கற்பிக்கும் பொருட்டேயாம். தன் கஞ்சம்போன்ற அடியை யாவருங் காண்பதற்காகப் பாதத்தைத் திருமால் நிமிர்த்தினன் என்பதுதான் அவ்வாறு வேறாகக் கற்பிக்கப் பட்ட பொருள்ஆகும். இவ்வணியின் இலக்கணத்தை முன்னோரிடத்தில் (வால்யூம் 1. பக்கம் 371) சிறிது விளக்கியிருக்கிறோம். விரகநோயுற்ற தமயந்தி நக்ஷத்திரங்களை நக்ஷத்திரங்க ளல்லவென்று மறுத்து ஒழித்து, அவை ஆகாயம்கொண்ட கொப்புளம் என்றதும், பரமசிவன் காமனைக் கொன்றதில்லை என்னச் சாதித்ததும் இவ்வணிக்கு உதாரணங்களாம்.

## இலக்கணம்

நிலைமொழி யிறுதியில் மகரமெய்யும் வருமொழி முதலில் உயிரும் இருக்குமானால் அவை எவ்வாறு புணரும் என்பதைக் கற்கவேண்டும்.

இன்றைய பாடத்தின் ஈற்றுச்செய்யுள் ஈற்றடியில் கஞ்சவடி, என வந்திருக்கின்றது. அதனைப்பிரித்தால் கஞ்சம் + அடி, என நிற்கும். இவ்விரு சொற்களும் சேரும்போது, நிலைமொழியீற்றில் மெய்யும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் அம்மெய்யின்மேல் இவ்வுயிர் ஏறி உயிர்மெய்யாகும் என்ற பொதுவிதியின்படி புணருமாயின் 'கஞ்சமடி, என்று ஆகவேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு ஆகவில்லை. அந்த மகர மெய்யே கெட்டுப்போய்விட்டது. கஞ்சம் + அடி = கஞ்சஅடி. இது கஞ்சவடி என, அகரத்திற்குப் பதிலாய் வகரம் வந்தவிதம் வேறு. அதனைச் சிறிது பொறுத்துக் கற்போம். இப்பொழுது கஞ்சம் என்பதிலுள்ள ஈற்று மகரமெய் கெட்டது, என்பது மாத்திரந் தெரிந்தால் போதும். எனினும், நிலைமொழியீற்று மகரமெய் வருமொழிமுதல் உயிருடன் புணரும்போதெல்லாம் கெட்டேவிடும் என்று எண்ணப்படாது. கஞ்சம் + அலர்ந்ததுஎன்பது கஞ்சமலர்ந்தது, என்று மகரமெய் கெடாமல் வருமொழி முதல் உயிர் ஏறப்பெற்று மற்றெல்லா மெய்யீறுகளையும்போலவே உயிர்மெய் யாகும். பின், கஞ்சம் + அடி = கஞ்ச அடி என ம் கெட்டு விகாரப்புணர்ச்சியும், கஞ்சம் + அலர்ந்தது = கஞ்சமலர்ந்தது என ம் கெடாமல் இயல்புப் புணர்ச்சியும் ஆனது ஏன் என்றால், காரணம் இருக்கிறது. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் உள்ள தொடர்இலக்கணத்தைக் கவனிக்க வேண்டும். கஞ்சம் + அடி என்பது கஞ்சம்போன்ற அடி என விரியுமாகையால் உவமைத்தொகை— ஆதலால் ம், கெட்டது; கஞ்சம் + அலர்ந்தது, என்பது எழுவாய்த் தொடர்—ஆதலால் ம் கெடவில்லை.

எனின், எவ்வெந்தத் தொடர்களில் நிலைமொழி ஈற்று மகரமெய் கெடாமல் இயல்பாய் வருமொழி முதல் உயிரை ஏற்று உயிர்மெய் ஆகும் என்றும், எவ்வெந்தத் தொடர்களில் அது கெட்டுப்போய்விடும் என்றும், பார்ப்போம்.

சொற்றொடர்கள், தொகாநிலைத்தொடர்களென்றும் தொகைநிலைத் தொடர்களென்றும், இருவகைகளாகுமென்பது ஞாபகத்திலிருக்கலாம். எவையெவை தொகைநிலைத் தொடர்களென்பதையும், எவையெவை தொகாநிலைத் தொடர்களென்பதையும் முன்னரே கற்றிருக்கின்றீர் (2-வது, வால்யூம். பக்கம் 313, 355, 377, 394, 411, 432, 455, 470.) இந்தச் சந்தர்ப்பத்தில் அவைகளை மீண்டு மோர்முறை படித்துத் தெளிந்து கொள்ளுதல் நல்லது.

I தொகாநிலைத்தொடர் ஒன்றிலும் நிலைமொழி இறுதி மகரமெய் வருமொழி முதல் உயிரோடு புணரும்போது கெடாது. அது இயல்பாகவே யிருந்து பொதுவிதியின்படி மற்ற மெய்யெழுத்துக்களைப் போலவே உயிரை ஏற்றுக்கொள்ளும். உதாரணம்:—

மரம் + ஆடியது = மரமாடியது—எழுவாய்த்தொடர்,
வரும் + அரசன் = வருமரசன்– பெயரெச்சத்தொடர்
பங்கஜம் + ஓடு = பங்கஜமோடு —விளித்தொடர்.
[பங்கஜம் என்ற பேருடைய ஒருத்தியைக் கூப்பிட்டு அவளை ஓடச் சொல்லும் பொருளில் இது விளித்தொடர் ஆகும்]
அரவம் + அரவம் = அரவமரவம்—அடுக்குத்தொடர்.
பறக்கும் + அன்றில் - பறக்குமன்றில்—வினைமுற்றுத் தொடர்.
[அன்றில் பறக்கும் என்னும் பொருளில் இது வினைமுற்றுத் தொடராம்.]
ஊரகம் + இருந்தான் = ஊரகமிருந்தான். ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

II தொகைநிலைத் தொடர்களில், வேற்றுமை என்றும் அல்வழியென்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன அல்லவா!

i. வேற்றுமைத் தொகையில், ஆறும்வேற்றுமை தவிர மற்ற உருபுகள்மாத்திரம் தொக்க, தொடர்களில் ம் கெடாது. உதாரணம்:—

நிலம் + உழுதான் = நிலமுழுதான்—இது, நிலத்தை உழுதான் என விரியுமாகையால், இரண்டாம்வேற்றுமைத் தொகை.
சூலம் + எய்தபுண் = சூலமெய்தபுண்—(சூலத்தால் எய்த புண்) மூன்றாம் வேற்றுமைத் தொகை.
சுந்திரம் + அண்ணன் = சுந்திரமண்ணன் [சுந்திரம் என்பவனுக்கு அண்ணன், என்ற பொருளில் இது நான்காம் வேற்றுமைத் தொகை ஆகும்]
மரம் + இறங்கினான் = மரமிறங்கினான் (மரத்திலிருந்து இறங்கினான்)—ஐந்தாம் வேற்றுமைத் தொகை.
குளம் + ஆடினான் = குளமாடினான் (குளத்தில் ஆடினான்) ஏழாம் வேற்றுமைத் தொகை.

ii. அல்வழியில், பண்புத்தொகையும் உவமைத தொகையும் தவிர மற்றத் தொகைநிலைத் தொடர்க ளில் ம் கெடாது.

உதாரணம்:—

கலம் + ஆழாக்கு = கலமாழாக்கு (கலமும் ஆழாக் கும்)—உம்மைத்தொகை.

காலம் மறைந்த பெயரெச்சம் ஒன்றும் மகர மெய்யை ஈற்றிலுடையதா யிருக்க இயலாதாகையால் வினைத்தொகைக்கு உதாரணம் இங்குக் காட்ட முடியாது. அப்படியே மற்றத் தொகைகளுக்குப் புறத்தே பிறப்பது அன்மொழித் தொகையாகையால் அதற்கும் இங்கு உதாரணம் காட்ட இயலாது.

# சிந்தாமணி நீதிச் செய்யுள்

(627 பக்கத் தொடர்ச்சி)

குழற்சிகைக் கோதை சூட்டிக்
கொண்டவ னிருப்ப மற்றோர்
கிழற்றிகழ் வேலி னானை
நேடிய நெடுங்க ணாளும்
பிழைப்பிலாட் புறந்தந் தானுங்
குரவரைப் பேணல் செய்யா
திழுக்கினா ரிவர்கள் கண்டா
யிடும்பைநோய்க் கிரைக ளாவார்.

[தன்னை, மாலைசூட்டிக் கொண்டவ னிருக்கும்போது அவனையன்றி ஒளிவிடும் வேலையுடையானொருவனை விரும்பித் தேடியவளும், தன்னைப் பிழையாதாளை வெளியே விட்டுவிட்டவரும், தம் குரவரைப் பேணுதொழிந்தவரும் துன்ப நோய்க்கு இரைகளாவர்]

தன்னை மாலை சூட்டிய கணவனை விடுத்து [illegible] துன்பத்தி ஆண்மகனை அவாவும் பெண் எத்த[illegible] என்பது [illegible]கற்பாலதாம். அன்னாள் வேறோர் ஆடவனை விழையற்குற்ற காரணம் யாதென நம்மைநாமே வினவினல் இரண்டு அல்லது மூன்று காரணங்களே கொள்ளத்தக்கனவாக வெளிப்படுகின்றன. முதலாவதாக, இருவருக்கும் கருத்து மாறுபாடு தோன்றுதல்; கருத்து மாறுபடுவதாயின் இருவர் செயலும் இருவேறு வகையினதாகவே இருத்தல் வேண்டும். அன்னணம் இருவர் கருத்தும் அதன்வழிச் செயலு மாறுபடுமாயின் அதன் விளைவு யாதென்பதை ஆராய்தல் வேண்டும். இக் கருத்துமாறுபாட்டினுக்குக் காரணமாக ஆடவனைக் கொள்வோம். இவன் கணிகையரைத் தேடும் காமுகனாகித் தன் மனையாளைத் தனிமனை யிருத்திவிடுகின்றான். இதனை யுணர்ந்த அவன்றன் மனைவி, "என்னைக் கொண்ட கணவன்றானும் அயலாளொருத்தியைக் காமுற்றனனே; யானும் அயலா னொருவனை விரும்பி இன்புறின் இதிற் குற்றமுளதோ?" எனக் கூறுதல் கூடுமாயின் இவடன் நிலை தெற்றெனத் தெளிவுறும். அன்னணமிலாது இவளும் பேகன்றன் பெருந்தேவியைப்போல்

மேலோ ராயினும் நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட்டு ஒழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்

என்பனபோன்ற நீதிகளை நெஞ்சம் பிறிதுபடுமாறு கூறலாமன்றோ? இதுவே கற்புடை மகளிரது அருங்குணம்! இஃதலாது தானும் பிறனை விரும்பி வாழ்வதாகப் புக்கின் அன்னவள்பாடு எண்ணத்தகுவதாமோ? இஃதன்றி மேற்கூறிய மாறுபாட்டினுக்குப் பெண்ணையே காரணமாகக் கொள்ளினும் ஆகுமன்றோ?

கணிகை யொருத்தி ஆடவனைக் காமுறற்கும் ஆடவனொருவன் பெண்ணினைக் காமுறற்கும் காரணம் ஒன்றேயெனக் கொள்ளலாம். அஃது பேரழகே யாகும். "கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடமன்றோ?" என்ற கம்பர் உரையும் நோக்கற்பாலதாகும். கட்டழகு வேண்டாமென்று நாம் கூறல் கூடுமோ? மக்கட்கு இயற்கையாகச் சில அழகுகள் அமைந்துவிடுகின்றன. இளமையும் வளமையும் தூய்மையும் நிறைந்த மனிதயாக்கையில் அழகுத் தெய்வம் அகலாதுறைகின்றது. ஒரு மனிதனது உடலும் இள[illegible]யும் தூய்மையும் திறமையும் சேர்[illegible] அவனது புறஅழகை வெளிப்படுக்[illegible]றன. இவ்வழகுகளும் விழையும் அ[illegible]க ஒருவன் பெற்றிருந்தாலே அவன் முழு அழகும் பெற்றவனாகின்றான் அவ்வழகு "மனவழகே" யாகும். புறஅழகு நிறைந்து நிற்குமாயினும், அகஅழகில்லாகுமாயின் அது சிறிது ஒளி குறைந்தே காணப்படும். மன அழகு பெற்றோர் புறவழகு இன்றேனும் ஒளி சிறந்து விளங்குவர். இவ்விரு அழகுகளும் மனிதனுக்கு இயற்கையாக அமைவனவாம். இவ்வழகுடையாரிடத்துக் கம்பர் கூறுமாறு "கண்டாரே காதலிக்கும்" பெற்றி யமையாது. அக்காமுகர் இவ்வழகுகள் அமையப் பெற்றாரிடத்து அணுகவும் அணுகார்; அணுகுதற்கு முரியரல்லர். எனவே கணவன் மனைவி மனமாற்றத்தினுக்குக் காரணம் காதலோடுகூடிய மணம் நிகழப்பெறாமையாகும். இவைகளை அச்செய்யுளின் பிற பகுதிகளையும் ஆய்ந்து அறிக.

நட்பிடைக் குய்யம் வைத்தான்
பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்
கட்டழற் காமத் தீயிற்
கன்னியைக் கலக்கி னானு
மட்டுயி ருடலந் தின்றா
னமைச்சனா யரசு கொன்றான்
குட்டநோய் நரகந் தம்முட்
குளிப்பவ ரிவர்கள் கண்டாய்.

[நட்பிடத்து வஞ்சனை செய்தோனும், பிறனுடைய மனையாளினது நலத்தைப் பெற்றவனும், மிகுந்த காமத் தீயால் ஓர் பெண்ணின் தன்மையை அழித்து அவளை மணம் செய்யாதவனும், உடலைத்தின்றவனும், அமைச்சனாயிருந்து அரசனைக் கொன்றவனும் ஆகிய இவர்கள் குட்ட நோயிலும் நரகத்திலும் அழுந்துவார்கள்]

பழிப்பொப்புமைக்கூட்ட வணியினைக் கொண்டுள இச்செய்யுளின் முதலடிக்குச் செயப்பாட்டு வினைப் பொருளாக நிற்பவன் அமைதியை ஒருவாறு தேர்ந்து தெளியலாம். எனினும்

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ லொல்லை யுணரப் படும்.



[நட்பினர் போன்று நன்மைதரும் சொற்களைச் சொன்னாராயினும் மாறுபட்டாரது சொற்கள் நன்மை தருவனவா தாராதனவா என்று கடிதி னுணரப்பெறும்]

இங்குக் குறித்த நீதிக்கு எல்லோரும் இலக்கியமாதல் இயலாதன்றோ. அஃதன்றியும் அன்னவன் கீழ் வரும் நீதியை உணராதிருத்தலும் கூடுமன்றோ?

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூ
லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று.

[நுண்ணிய அறிவுடையாரொடு கூடி அதனாலுண்டாகும் இன்பத்தை அனுபவித்தல் மேலுலக இன்பத்தினையே ஒத்திருக்கும் மேன்மையினை யுடையதாகும். நுண்ணிதாய அறிவிலாராகிய பயனில்மக்களோடு கூடுதலானது நரகத் துன்பத்து ளொன்றாம்]

என்றதொரு நீதியையும்

"களவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

என்ற நீதியையும் நட்பிடத்து வஞ்சித்தவன் கேட்டிருப்பனாகில் சிறிதாதல் நாணுதல் கூடுமோ என ஐயுறலாகும்.

சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு

[பெருமையுடையாரது சீர்மையினைப் போற்றிப் பேணுவேமென்னும் எண்ணம் கீழோர் மனத்தகத்து இல்லையாகும்]

என்ற நீதிக்கு அவன் இலக்காயின், யார்தான் என் செய்வது? அத்தகை நோக்கமிலாத இவன் பெரிதும் இடர்ப்படுவ னென்பது அநுபவமுகத்தா னறிவதோருண்மையாகும்.

நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழல்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

[சிறியோரது கேண்மையானது உதயகாலத்து நிழல் போலச் சிறிதுசிறிதாகக் குறையும், பழமையாக நின்ற புகழினையுடையாரது நட்பானது காலடியில் தங்குகின்ற உச்சிக்காலத்து நிழலையொப்ப மேன்மேலும் நீண்டு செல்லும்.]

என்ற முற்றுவமை யணிதிகழுறும் வெண்பா நீதியினையும்,

தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத்
இருண்ட கல்லையும் தன்னிற மாக்கிய விரதம் [தோடி

என்ற இயற்கைகளினிடத்து மனிதஉள்ளத்தினுணர்ச்சியைக் காட்டும் இக்கவியையும் அன்னவன் உணர்ந்திருப்பனேல் சிறிது திருந்துதலும் ஆகும். இனிப் "பிறன்மனை நலத்தைச் சேர்ந்தான்" என்ற பகுதியினை ஆய்வோம். அறனும் பொருளும் பிறன்மனை நயக்குமாடவனிடம் இல்லை யென்பது வள்ளுவர் மதம். அவனிடத்து அறனும் பொருளும் ஒழிய எஞ்சி நிற்பனவற்றை வள்ளுவர் உரையா லறிக.

பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்.

[பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியுமென்ற இந்நான்கும் பிறன்மனையாளை விரும்பிச் செல்வானிடத்து ஒருபோதும் நீங்காவாம்.]

உள்ளதை உள்ளபடியே உரைப்பதில் வள்ளுவரை விஞ்சியவர் யாவரே? இக்குறட்கண் எத்தகைஉயர்ந்த அநுபவத்தோடு பொருந்திய கருத்து அமைந்திருக்கின்றது காண்மின்கள்! அன்றியும்

"அறைபோ கமைச்சர் பிறன்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோர்"

என்ற சிலப்பதிகார நீதியும் இதற்கு அடியார்க்கு நல்லாரெழுதிய உரையும் காண்க. "தம் படை குடி முதலிய ஐந்தினோடு உயிருறுப்புரிமைக்குத் தம்மைத் தேறியளித்த அரசரைக் கீழறைஎண்ணுமமைச்சரும் தமது மனைவியர் தனிப்பத் தனித்த பிறர் மனைவியரை விரும்பும் துச்சாதிகளும், தமது நெஞ்சிற் பொருளை வஞ்சித்துப் பொய்ச்சான்றேறுவாரும் சிறப்புச் செய்துழி உழைநின்று புகழ்ந்து அவர் புறக்கொடையிற் பழிதூற்றுவாருமாகிய இவர்களே என் கையிற்கொண்ட இப்பாசத்திடத்து அகப்படும் பெயர்". இதுவன்றியும் சிந்தாமணி முத்தியிலம்பகத்துள்

மடத்தகைய நல்லார் மனங்கரிய மாற்றார்
பிடர்த்தலையொள் வாள்போற் பிறர்மனைகள் சேரி
னெடுப்பரிய துன்பத் திடைப்படுவ ரின்னா
நடுப்புடைய காமம் விடுத்திடுத லன்றே

[இளமைத் தன்மையினையுடைய தம் மனைவியர் மனமானது வாடுமாறு பகைவர் கழுத்தில் வைத்துள்ள ஒள்ளிய வாள்போலும் இன்னாததாய பிறருடைய மனையாளைப் பொருந்தின் கொள்ளமுடியாத இடும்பையிடைப் படுவர். ஆகவே நடுக்கத்தையுடைய காமத்தினை விடுத்திடுதல் செவ்விதாம்]

"பிறர்மனை சேர்தலான் தான் கொண்ட மனைவியும் வருந்துவாள்" என்ற ஈண்டைச் செய்யுட்குறிப்பு மகிழற்பாலதாகும். மனைவி வருந்துதலோடு மமையாது அதனான் வரும் வெய்ய தீங்குகளையும் ஈண்டு இரண்டாவது அடிக்கண் காணும் குறிப்பினையும் காண்க.

கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரி யின்றி விளைவஃகிப் பசியு நீடிப்
பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
யாணையிவ் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்றான்.

[அரசனுடைய செங்கோன் முறைமை பிறழுமாயின், கோள்கள் நிற்கும் நிலைகுலைந்து, இரவு நீடிப், பகல்குன்றி, மழையின்றி நிலமானது விளைவு குறைந்து, பசி பிணிமிக்கு, மாதர்தம் கற்பழிந்து, அறங்கள் மாறி, இவ்வுலகமானது கேடுறும்.]

இச்செய்யுளானது,

"கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னும் தகுதியின் றாகும்"

என்ற "மணிமேகலை" அடிகளின் பொருள்களைக் கொண்டு திகழ்தல் காண்க. இன்னும் தமிழ்த்தாயின் அணிமேகலையாய இம்மணிமேகலைக்கண்ணே "...... மன்னவன் கோணிலை திரியாக் கோலோனுக" எனக் கூறியிருத்தலின் கோள்கள் நிற்கும் நிலை குலையாமைக்குக் காரணம் மன்னவன்கோல் கோடாமையே யாகும் என்ற கருத்துப் பெறுதுமன்றோ?

# குலசேகரர்.

[630 வது பக்கத் தொடர்ச்சி]

## பேயாழ்வார்

*தீதில் நன்னெறி நிற்கவல் லாதுசெய்*
*நீதி யாரொடுங் கூடுவ தில்லையான்*
*ஆதி யாய வரங்கனந் தாமரைப்*
*பேதை மாமண வாளன்றன் பித்தனே.* 5

**நன்னெறி**

நல்வழியில் நடப்பார் பலர். ஒன்றுமறியா முழு மகனைப் பால் கறப்பென்று உரையென்றால், அஃது அவனுக்கு இயலாமையின், பொய்யுரையான். எல்லோரும் நல்லவர் எனப் புகழின் தனது தொழிலும் பல்கிவளரும் என்று எண்ணி ஊதியம்கருதி நல்வழி புகுவோரும் உள்ளனர்.

*வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவுந் தமபோற் செயின்*

பிறர் பழிப்பரே எனஅஞ்சியும்,அரசன் கொல்வானே என நடுங்கியும், கொலையையும் மறத்தினையும் மறப்பவர் பலர். ஆனால் இவர்கள் கயவரேயாவர்.

*அச்சமே கீழ்கள தாசாரம் எச்ச*
*மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.*

**தீதில் நன்னெறி**

ஆனால் அறவாழி யந்தணரான பெரியோர், அறிவு வழிநின்று அறம் வளர்க்கின்றனர். செந்தண்மை பூண்டொழுகுவதால் அவர் செய்வன எல்லாம் அறமாகின்றன. 'அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி' நிற்கின்றனர். ஈது நமக்கு இன்பந் தருதலின் நன்னெறியாகும். பிறரை அவாவினாலும், அச்சத்தினாலும், அறியாமையாலும் மயக்குதல் இன்மையால் பிறர்க்கொரு தீங்கும் இந்நெறி நின்றாரால் ஏற்படுவதில்லை. எனவே இது தீதில் நன்னெறியாகும்.

**நிற்க அலாதுசெய் நீதியாரோடும்**

முழுமக்களும் கயவரும் அறவோர்போல ஒழுகி அறமே செய்யினும் அவர்களது மனநிலை அவாவுக்கும் அச்சத்திற்கும் அடிமையாதலின் அவர் செய்யும் அறங்கள் அறமல்லாதனவே யாம். அறமென்பது புறத்தொழிலைப் பற்றியதன்று. அகத்தூய்மையைப் பொறுத்ததே யாகும். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்". அறவாழியானேரே அந்தணர் ஆதலின் "அறவாழியந்தணர்" என்றும் அந்தணரே அறவோர் ஆதலின் " அந்தணர் என்போர் அறவோர் " என்றும் பாடுக.

**கூடுவதில்லையான்**

அவாவும் அறியாமையும் அச்சமும் கருதி அறஞ் செய்யப்புகுந்த போலி யறவோரோடு கூடின் பெரும் பழியே சூழும். தீய வழியில் நிற்பார் தமது தீமையை மறக்காது ஒழுகுதலின் அன்னோர், இப்போலி யறவோரினும் உயர்ந்தாரே என்க.

*வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.*

*தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து*
*வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.*

**ஆதி**

இம்மயக்க உலகின்நின்றும் ஈடேறுவ தெப்படி. எல்லாவற்றிற்கு மிறைவனை முதல்வன் ஒருவன் நம்மைக் காத்து நிற்கின்றான். அவனருமை கேட்டு அஞ்சற்க.

**ஆயன்**

அவன், இடையரில் ஒருவனாய் வந்து பிறந்து இடைச்சியால் கட்டுண்டு மாடும் மேய்த்து, அவற்றிற்கு உறிஞ்சு கல்லாயும் நின்ற எளியோன்.

**அரங்கன்**

அதுவும் முன்னாளில் நடந்ததென்று இரங்காவகை அரங்கத்தே வந்து புகுந்தான்.

**அந்தாமரைப் பேதை**

அருள்செய்வதில் ஐயமில்லை என்பதனைத் தண்ணருளாம் தனிப்பெருந் தாயொடும் கூடிநின்ற நிலை அறிவுறுத்துகின்றது. (அம்=நீர்) மெல்லிய நீரில்எழுந்த மெல்லிதாகிய(அம்=அழகு அழகிய தாமரைப்பூவில் பெண் வடிவாய மெல்லியஉடலோடு மெல்லிய உள்ளமும்பெற்றவள். அவள் நமக்கு மனம் இரங்குதலைச் சொல்ல வேண்டுமோ? அவளோ பேதை. கொடியராயினும் அவர் துன்புறுவது கண்டால் மனம்பொறாது அவர்கள் கொடுமையை மறந்து மனம் குளிர்ந்தருள் செய்யும் பெருமையே பேதமையாகும். அப்பண்பே வடிவமானவள்அருட்டாய். இவன்பண்ணின குற்றத்தை அவன் காணாதபடி மறைப்பாள். அவள் கூறுவதை அப்பெரியான் கேட்பானோ என ஐயுறல் வேண்டாம்.

**மாமணவாளன்**

அவளால் அன்றோ அவன் பெருமையடைவது. (மா - பெருமை) ஆதலின் அவளது அருளுரை கேளாத நாள் இல்லை. அம்மட்டோ! இறைவன் புது மாப்பிள்ளையாகிய மணவாளனாக விளங்குதலினால் புதுப்பெண்ணின் பேச்சைக் கேளாதிருத்தல் இவ்வுலகிலும் இல்லை; அவ்வுலகிலும் இல்லை.

**தன்பித்தனே**

இவ்வெளிமையை எண்ணுதலும் அவன் வெறிகொண்டு பித்தனாகின்றேன்.

*எம்ப ரத்தரல்லா ரொடுங் கூடலன்*
*உம்பர் வாழ்வை யொன்றாகக் கருதிலன்*
*தம்பி ரானம ரர்க்கரங் கநகர்*
*எம்பி ரானுக் கெழுமையும் பித்தனே.* 6

[எம்பரத்தரல்லார் - எம்மைப்போல ஆண்டவனிடத்தே அன்புபூண் டொழுகாதவர்; உம்பர் - ஸ்வர்க்கம்; ஒன்றாக - ஒருபொருளாக.]

**எம்பரத்தர் அல்லாரோடுங் கூடலன்**

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா அழுக்குடம்பும் இந் நின்ற நீர்மையினியா முறாமை ஒழிவில் காலம் எல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்ய வேண்டுவேன் யான். இவ்வழியாகிய எம்வழி நில்லார் தம் வழிநில்லேன் (கூடுதல் என்பதற்கு அவர்களோடு கூடிக்குலாவி இன்பந்துய்ப்பதே பொருள் என்பதை இரண்டாமடி நன்கு விளக்குகின்றது.)

**உம்பர் வாழ்வையும் ஒன்றாகக் கருதிலன்**

நல்வினத்தார்(ஸ்வர்க்கர்-சுவர்க்கர்)எனப் பெயர்பெற்றமேலுலகத்தாரது இன்பமும் ஒருபொருளாகக்கருதவில்லை. நிலையிலாத இன்பத்தை நிலையாயினதென்று நினைந்து நிற்பாரோடு எங்ஙனம் கூடுவேன். பெண்கள் இன்பமும் கள்ளின் இன்பமுமே, அவர்கள் கண்ட இன்பம். பெண்களை எல்லாம் பொது மகளிராக்கி இன்பம் துய்க்கும் அவர்கள்வாழ்வும் ஒரு வாழ்வோ?



**அமரர்க்கு**

அம்மேலுலகிற்கும்மேலுலகமானஉயர்நிலையைக்கண்டு அப்பித்தேறியவனானேன். அறிவே கள்ளாக உண்டு அருளே பெண்ணாகக் கொண்டோன் திகழும் நாடு; அப்பெண்ணும் அரும்பெருங் கடவுளாய் அழகெரிக்கும் நாடு; திருவீற்றிருக்குந் திருநாடு. அந்நிலமிசை நீடுவாழ்வாரே அழியாத நிலையடைந்தோர். இறவாதவர் (அமரர்) என இயம்புவது இன்னோரைத்தான் அவ் வயர்வற மமரர்களே அழியாப் பேரறிவு பெற்றுப் பேரின்பத்திற் றிளைப்பர்.

**தம்பிரான்**

இன்னோருமடிவணங்கும் பெரியோன் தனக்கொரு முதலிலாதவனே யாவன்.

**அரங்கநகர்**

எல்லார்க்குந் தலைவனாய் நின்ற அந்நிலை அனைவர்க்கும் பயன் தாராதென அறிந்து உலகத்தேவந்து தன் ஆரழகினைக்காட்டி அடிமைகொள்ளவேண்டி அரங்கத்தே ஆற்றங்கரையில் நம்மைப் பிடிக்க வொரு கோயிற் பொறிவைத்துக் காத்திருந்தபோது, காத்திருத்தலையும் பொறாதவனாய், எளியேனை என்மேல் மையல் கொண்டு என்னையும் அன்புவலையிற் சிக்கச்செய்து குடிமகனாகக்கொண்டு எனக்குந் தலைவனாயினான்.

**எம்பிரான்**

எல்லாவின்பமுமான இறைவன் இவ்வாறு மேல்விழுந்து தழுவியபோது எனக்குப் பித்தேறிவிட்டது. இப்பித்து இப்பிறவியிலன்றி ஏழு பிறவியளவும் தொடர்ந்து வரும். என் பித்திருந்தபடி இஃதன்றோ.

*எத்தி றத்திலும் யாரொடுங் கூடுமச்*
*சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்*
*அத்தனே அரங்கா என்றழைக் கின்றேன்*
*பித்தனா யொழிந்தே னெம்பிரா னுக்கே.* 7

**மால்**

ஆண்டவன் என்மீது மால் கொண்டெழுந்தான்.

**அத்தா அரங்கா**

அவனே எனக்கு அத்தனா(தலைவன்)கிய தலைவன். தண்ணருள் நிறைந்த (அத்தன்) தந்தையே யாகி அரங்கநகர் புகுந்து யான் காண வீற்றிருக்கின்றான்.

**செங்கண்மால்**

குளிர்ச்சியும் மென்மையும் இனிமையு மிக்க செந்தாமரைமலர்போலச் சிவந்து அழகியதாய் ஒளிவிடும் தனது கண்வலையை வீசி என்னைத் தன் வழிக்கொண்டான்.

**எம்பிரான்**

என்னுடைய தலைவனாயினான். என்மனம் அவ்வலைக்குட் பட்டபோது வேறெங்கே ஓடுதல் கூடும்.

**பித்தனா யொழிந்தேன்**

அவன் பெருமையினையும் அருளினையும் எளிமையினையும் அழகினையும் எண்ணுகின்றேன்.

**என்றழைக்கின்றேன்**

எண்ணிப் பித்தனாகிக் கூப்பிடுகின்றேன். என்பித்து நின்றபடி அஃதே என்க.

**எத்திறத்திலும்**

மால் கொண்டமனம் பிறரோடு கூடுவதெங்ஙனம். அடியவராய அந்தணர் அறவோரேயாதலில் அவர்கள் செய்வன சிற்சிலபோது மறம்போலத் தோன்றினும் அறமேயாகும். ஆதலின் எத்திறத்திலும் அவர்களோடு கூடிவாழலாம்.

**யாரோடும்**

மக்களில் பலர் மாக்களே யாதலின், அறநெறியே ஒழுகி நிற்பதில்லை; மறநெறியே நடந்து செல்வதுமில்லை. அறமும் செய்து மறமும் செய்து இடைநின்றாசலாடுவர். தீதில் நன்னெறியேசென் றுலாவும்போது அவ்வழியில் நின்று அவர்கள் பிரியும்வரை வழிப்போக்கராய் அவரோடு ஒத்துழைத்தல் கூடும். யாரொடும் கூடலாம் ; எத்திறத்திலும் கூடுதல் இயையாது ; எத்திறத்திலும் சிலரோடு கூடலாம் ; எத்திறத்திலும் யாரொடும் கூடுதலாகாது.

**சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்**

ஆனால், மக்களோ, நல்லோராயினும் தீயோராயினும் பிறரோடு கூடிவாழும் இயல்பினையுடையவர். கூட்டில் அடைத்துவைத்த கோளரியும் கொழும்புலியும் அல்லர் தனித்து வாழ்ந்தால் இவர்களுக்குத் தலை வெடித்துப்போகும். ஆதலின், எத்திறத்திலும் யாரொடும் கூடிவாழ முற்படுவர். இவ்வுள்ள நிலையை என் வரையில் மாற்றி யமைத்தான் கண்வீசி அடிமை கொண்ட கண்ணன். ஒன்றைப்பற்றிய உள்ளம் அப்பற்றிய நிலையில் வேறொன்றினைப் பற்றாதென்ற இயற்கைவழியே என்னைத் திருத்தி யமைத்தான். யானோ நோன்பு நோற்று இந்நிலை யடைந்தேனோ? அடைதலும் கூடுமோ ? கூடுவதில்லை. அவனருளாலே அவன் தாள் வணங்கினேன். அவன் என்மேல் மால்கொள்ள என் மனமும் அவன்மீது மால்கொண்டது. அந்நிலையில் பிறிதொன்றை அம்மனம் கொள்வதற்கு இடமில்லை.

*பேயரே யெனக்கி யாவரும் யானுமோர்*
*பேயனே யெவர்க்கு மிது பேசியென்*
*ஆயனே யரங்கா வென்றழைக் கின்றேன்*
*பேயனா யொழிந்தே னெம்பிரா னுக்கே.* 8.

189068

**பேயரே எனக்கியாவரும்**

நிலையில்லாதவற்றை நிலையாயின என்று மாறியுணர்ந்து பேய்போலு முழன்றலையும் உலகினர் என்னளவில் பேயரே யாவர்.

**யானுமோர் பேயனே எவர்க்கும்**

அவர்கள் என்றும் உண்டென்று உறுதி கூறும் உலக வாழ்க்கையை நிலை இல்லாததெனப் புறக்கணித்து நிலையான அரங்கனை எண்ணிப் பேயாய் அலைகின்றேனாதலின் அவர்கள் அளவில் யானுமொரு பேயனே.

**இது பேசியேன்**

இதைப் பேசிப் பேசிப் பயன் என்னை. பேச்சினால் பெருநிலை யடைந்தார் ஒருவரும் இல்லை. தீதில் நன்னெறியில் நாம் ஒழுகிக் காட்டுதல்வேண்டும். அது கண்டு உலகினர் உள்ளம் திரும்பும். அளவிலா இன்பத்தில் அடியவர்கள் மூழ்குவதுகண்டு அவர்களும் அவ்வழி யடைவர்.

**ஆயனே**

பேய்நிலை நின்றே பேரின்பங் காட்டிப் பேயரைத் திருத்துவேன். அறிவு, கண்ணாற் காண்கிறது பொய்

யென்றிராதபடி வந்து பிறந்து தன் படிகளை எனக்குக் காட்டிய ஆயன். காண்பதெல்லாம் கடவுளே என்பதை ஓரிடத்தே கடவுள் ஒளி மிக்குத் திகழநின்றருளிக் காட்டிவிட்டான். கடவுளாய் வந்து அறிவின் பொருளை நமது கருத்துக் கிசைந்த பாட்டாய்ப் பாடினான். கண்டவர்க்குக் காட்சிதந்து கைக்கெட்டி நின்றான்.

அரங்கா

அப்பிரிவினுக்குப் பிற்படரிழவோடே தலைக்கட்டாதபடி கோவிலில் கண்வளர்ந்தருளிய பெரிய பெருமாளது திருப்பெயரைச் சொல்லி அளவுகெடக் கூப்பிடாநின்றேன்.

பேயனா யொழிந்தேன் எம்பிரானுக்கே

எல்லோரும் பித்தனென் றென்னைக் கைவிடும்படி, என் இறைவன்வாய் பட்டுப் பேயனா யலைகின்றேன். ஆயினும் எனது இன்ப நிலைகண்டு இகழ்வாரும் இறைவனைப் புகழ்வாராய் என்வழிதிரும்பி இன்பநிலையடைந்து உய்வார்கள்.

> அங்கை யாழி யரங்க னடியிணைத்
> தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்க்
> கொங்கர் கோன்குல சேகரன் சொன்னசொல்
> இங்கு வல்லவர்க் கேதமொன் றில்லையே. 9.

அங்கை

செக்கச் சிவந்து பழமெனக்கனிந்து மெல்லியதாய் நுண்ணிதாய் முடியும் அறிவுபோலஅடைவேசென்று அழகாய் முடியும் விரனுனிகளோடும் கரும்பின் கணுவெனக் காணவும் இனிக்கும் விரல்வகைகளோடும் விளங்கி, அகன்று நின்று வெளியே உயர்ந்து சிறுகச் சிவந்து, உள்ளிடை தாழ்ந்து ஒளிவேறுபாட்டால் மிகச்சிவந்தும், ஓவியம்போன்ற கீற்றுக்களோடு திகழும் அங்கையோ அருளன்னை கைப்பிடித்து மணந்த மெல்லிய கையாகும். அக்கையால் பிடிக்க இவ்வாழி என்னநோன்பு நோற்றதோ. தாமரை முகிழன செங்கை குவிந்துநிற்கும் ஒரு விரலால் ஆழியினைப் பிடித்த நிலையில் முன்கையானது யாழின் குடங்கைபோல விளங்கக் கல்லெனத் திரண்ட தோளும் வன்மையைக் காட்டிநிற்கும்.

ஆழி

சுடரொளி பெருக்கி ஒரு சுட்டுவிரலில் சுழன்று நிற்கும் அவ்வாழியைக்கண்டு பகைவர் உள்ளம் பதைபதைக்க நடுங்குவர். அன்பரோ அவனுக்கோர் ஒப்பனையாகிய அவ்வொப்பிலா ஆழிகண்டு மையல்கொள்வர். பகையும் ஒழியுமென உறுதிகொள்வர்.

அரங்கன்

இவ்வாறு ஏரெழிலைக்காட்டி எம்மை ஆட்கொள்ள வேண்டி அரங்கத்து வாழ்கின்றான் மணவாளப் பெருமாள். அவனுடைய இரு தாள்களாகிய மலர்க்கூட்டிலே என்மனம் சென்று அடைபட்டது.

அடியிணை தங்குசிந்தை

ஒப்பொன்றில்லாத தனிப்பெரும் பித்தனானேன். கொங்குநாடுடைய கோமானாய்க் குலசேகரப் பெருமாளென உலகவாழ்க்கையில் உயர்ந்து வாழ்ந்தவனே, உலகோடும் கூடுவதில்லை என்று உறுதிசெய்து இவ்வாறு மாறினேன். இப்பாடல்கள் உலக வாழ்க்கையின் இழிவையும் அன்பர் வாழ்க்கையின் இன்பத்தையும் எடுத்துக்காட்டுதலினால், இவற்றைப் பாடும் உலகினர் இந்நிலையடைந்து, அதில் வல்லவராதல் எளிதேயாகும். உலக வழக்கின் உண்மையை யுணர்ந்து அவர்களும் உயர்நிலையடைவர்.

ஏதமொன்றில்லையே

> யாதனின் யாதனின் நீங்கினான் நோதல்
> அதனின் அதனின் இலன்.

ஆதலினால்,அவர்களுக்குத் துன்பம் ஒன்றும் வாராது.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 15. பூக்கொய் படலம்.

கோம்பரே கூச வேண்டா நம்பியும் பணிவு செய்வான்.

அன்னதோ ரழகிற்கும் இன்பமெலாம்நுகர்வதற்கும் அரும்பெருந் தத்துவங்களுக்கு முறையுளாய சந்திரசயிலத்தின்கண் மன்னவனது சைன்னியத்திருந்தோர், கலைப்பொருள் தேர்ந்து கருத்தினா னுண்டும் காரிகையார்மனத் தூடல் தீர்த்தும்,

636 பக்கத் தொடர்ச்சி

பண்ணமைந்த பாடல்நலங்களைச் செவியின் மாந்தியும், கண்ணுளர் ஆடலின் மகிழ்ந்தும் கங்குலைக் கழிக்க, இரவென்னும் இரணியனைத் தன் கிரணங்களென்னும் ஆயிரங்கரங்களால் கடிவான் மானுடமடங்கலென்னச் சூரியன் உதயகிரியாம் தமனியத் தூணின்று தோன்றினான். அந்தக்காலை, அரசனோடனைவரும் தம் முறையெலாம் முடித்தவ் வரைவிட்டகன்றுபோகிச் சோலையின் வளத்தால் திகழும் சோணைமாநதியின் தடங்கரைவந் திறுத்தனர். அருக்கனும் பகலோனானான். மடந்தையரும் மைந்தர்களும் மலர்கொய்துபுனலாடிவிளையாடும் வேட்கையினராய்த் தடங்களும் மடுவுஞ்சூழ்ந்த தண்ணறுஞ் சோலை சேர்ந்தார்.

பூநாடிப் பொழிலகம் புக்க நங்கையர் முதன்முதல் அங்குள புட்குலங்களை வென்று அவைதம் வாயடங்கிப் புறந்தந் தகலச் செய்யலாகின்றனர். எவ்வாறெனின்,

> திண்சிலை புருவ மாகச் சேயரிக் கருங்க ணம்பால்
> புண்சில செய்வ ரென்று போவன போன்ற மஞ்ஞை
> பண்சிலம் பணிவா யார்ப்ப நாணினாற் பறந்த கிள்ளை
> ஒண்சிலம் பரற்ற மாத ரொதுங்குதோ றொதுங்கு
> [மன்னம்.

[மாதர் புருவத்தை வலிய வில்லாகக்கொண்டு, செவ்வரி படர்ந்த கரிய கண்கள் என்னும் அம்பினால் தமக்குப் புண் உண்டாக்குவர் என்று மயில்கள் அகல்வன போன்றன. பண்களின் தன்மைவாய்ந்த அவர்களது அழகிய வாய்மொழி கேட்டுக் கிளிகள் நாணத்தினால் பறந்து போயின. மாதர் தம் ஒளிபொருந்திய சிலம்புகள் ஒலிக்க நடக்குந்தோறும் அன்னங்கள் தோல்வியுற்று அகன்றுவிடும்]



> பாசிழைப் பரவை யல்குல்
> பண்டரு கிளவித் தண்டேன்
> மூசிய கூந்தன் மாதர்
> மொய்த்தபே ரமலை கேட்டுக்
> கூசின வல்ல பேச
> நாணின குயில்க ளெல்லாம்
> வாசகம் வல்லார் முன்னின்
> றியாவர்வாய் திறக்க வல்லார்.

[பசும்பொன்னாபரணங்களணிந்த பரந்த அல்குலும், பண் போன்ற மொழிகளையும், குளிர்ந்ததும் வண்டுகள், மொய்க்கப்பெற்றதுமான கூந்தலையும் உடைய,மாதாது பேர் இரைச்சலைக்கேட்டுக் குயில்கள் வாயடங்கியதற்குக் காரணம் அவை பயங்கொண்டதன்று. நாணத்தால்தான் அவைபேசவில்லை. பேசும் திறமை வாய்ந்தவர்களுக்கு எதிரில் நின்று வாய் திறக்கத் துணிகின்றவர் யாருளர்.]

அன்னமும் மயிலும் கிள்ளையுங் குயிலும் அணுகற்கு நாணி இங்கு ஒருவழி யொழிந்தன. பாண்டியன் தன் பரிவாரத்தினோடு புக்காடிய காவினில்,

> கோடும் பிறைவா ணுதலார் குழலைக் கருவிக் காரென்
> றாடுந் தோகை யவர்கண் ணோக்கிக் கணையென் றஞ்சி
> யோடுங் கொடியி னன்னா ருருமாந் தளிரென் றயில்வா
> னாடுங் குயிலன் னவர்பண் ணிசைகேட் டொதுங்கி
> [நாணும்

[வளைந்த பிறைச்சந்திரனைப் போன்ற ஒளியையுடைய நெற்றியையுடைய மாதர்களது கூந்தலைக் கருமேகமென்று கருதி மயில்கள் தோகை விரித்தாட, அப்பொழுது அவர்களது கண்களை நோக்கி, அவை அம்புகள் எனப் பயந்து ஓடிவிடும். கொடிபோன்ற அம்மாதர்களது மேனியை மாந்தளிர் என்று எண்ணி உண்பதற்கு விரும்பி அடையும் குயில்கள் அவர்களது பாட்டின் இசையைக்கேட்டு நாணத்தால் அகன்று விடும்]

எனப் பரஞ்சோதிமுனிவர் காட்டுங்கால், ஆசையுற்று வருவன, அச்சத்தால் நாணத்தால் அகலவேண்டியிருக்கும் கதிபின்னு மொருபடி இரங்கற்பாலது.

" வாசகம் வல்லார் முன்னின்று யாவர் வாய்திறக்க வல்லார்'' என வேற்றுப்பொருள் வைக்கத்தொடங்கிய கம்பர், பின்னும் பல செய்யுள்களில் அவ்வணிக்கினம்போன்ற தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியை அமைத்துப் பயில்வாராகின்றனர். மயில் குயிலன்னங் கிளியென்னுமிப் புள்ளினங்களைப் புறங்கண்டவம் மங்கைமார் மரங்கள்பால் மலர்கொய்வான் அமையுங்கால் அவர்,

> நஞ்சினுங் கொடிய நாட்ட
> மமுதென நயந்து நோக்கிச்
> செஞ்சவே கமலக் கையாற்
> றீண்டலு நீண்ட கொம்பர்
> தஞ்சிலம் படியின் மென்பூச்
> சொரிந்துடன் றாழ்ந்த வென்றால்
> வஞ்சிபோன் மருங்கு லார்மாட்
> டியாவரோ வணங்க லாதார்.

[விஷத்தினும் கொடிய தம் கண்களால் அமுது தான் இவை என்னும்படி மிகவும் இளகிப்பார்த்துச் செம்மையான தம் தாமரைபோன்ற கைகளால் தீண்டியவுடன் பெரிய அம் மாக்கிளைகள், அவர்களது சிலம்பணிந்த பாதங்களில் மெல்லிய பூவைச் சொரிந்து தாமும் தாழ்ந்து நின்றன என்றால்—வஞ்சிக் கொடிபோல் நுண்ணிய இடையையுடைய மாதர்களிடத்தில் வணங்கி நிற்காதவர் யாருளர்!]

என்று கம்பர் கொளுத்திக்காட்டி நகுகின்றார். கொடியென நுடங்கு மிடையினராயினும் வனிதையர் வணங்கிலர்; திண்ணெடு முறுப்புவாய்ந்த தோன்றல்கள்தாமே கந்துகமதக்கரியை வசமாய் நடத்தும் மந்திரம்போல் அம்மெல்லியலார் விரனுனி தீண்டலும் தம்வயந் துறந்து தாழலாவது இயற்கையெனினும் விந்தையாயிருக்குமாறு காணென்பார் கவி. குற்றியலுகர வீற்றிற்கு அர் போலியாமெனப் புகன்றுள இலக்கண நூல்கள். எனினும் கொம்பு என்னது கொம்பர் என அதனைப் பயன்படுத்திக்கொள்ளக் கற்பிக்க வல்லவர் கம்பரன்றி யாரே உளர்! நாயர் கழுதையர் என்று பரிகசித்தல்பொருட்டு ஒன்றன்பாலுக்குப் பலர்பால் விகுதிசேர்த்து வழங்குவது ஒக்க, போலி என்னும்நலத்தினால் அதேபரிகசத்தைப் பெண்தொட்டாட்டத்தாழும் கொம்பிற்குச் சார்த்தியது கம்பர்தம் சொற்றிறப் பெருமிதம் எத்துணையென்பதை எடுத்துக்காட்டும். இக்கருத்தினைக் கவிகள் பற்பலர் இலக்கியங்களில் அழகுற வமைத்திருக்கக் காண்கின்றோம். வானுடர் பெற்றிலாப் பூமாலை புரண்ட தோளொடும் தம் நன்னகர் நோக்கியேகுங்கால் நளன் ஓர் பொழிலூடுபோம்போது அங்கு நிகழ்ந்தவொன்றைக் குறித்து,

> "பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
> பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
> பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காண்''

எனத் தன்னருந் தமயந்திக்குக் காட்டியதூஉம் இக்கருத்ததே. "வஞ்சிபோன் மருங்குலார்மாட்டு யாவரே வணங்கிலாதார்'' என்ற அக்கம்படியே, "பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே'' என மொழிமாறி வந்திருக்கின்றதெனினும், "வஞ்சிபோல் மருங்கலார்தாமே வணங்கவேண்டியவர்களா யிருக்க, அவர் பிறரை வணங்கச்செய்கின்ற விந்தை புகழேந்தியால் காட்டப் பெறவில்லை. கொம்பு என்பது இங்கு அதன் போலியையும், அதற்குரிய 'கேலி'யையும் இழந்து நிற்கின்றது.

பரஞ்சோதி முனிவர்,

> இம்பர்வீ டளிக்குந் தெய்வ
> மகளிரே யென்பார் கூற்றம்
> வம்பல மெய்யே போலும்
> வளைக்கையார் வளைப்பத் தாழ்ந்து
> கம்பமுற் றடிப்பூச் சிந்தி
> மலர்முகங் கண்ணீர் சோரக்
> கொம்பரும் பணிந்த வென்றால்
> உலகியல் கூறற் பாற்றோ.

[இம்மையில் சுவர்க்க இன்பத்தைத் தருகின்ற தெய்வப் பெண்கள் இவர் என்று சொல்லுவார் வார்த்தை, வீணன்று உண்மையாய்த்தான் இருத்தல் வேண்டும். ஏனெனில், வளையலணிந்த கையுடைய மாதர் வளைக்க, அதனால் நடுக்கமுற்று, அவர் பாதங்களில் மலர்களைத்தூவித் தம் முகமாகிய மலர்களிலிருந்து கள்ளாகிய நீரைச் சொரிந்து கொம்புகளும் பணிந்த என்றால்—உலகத்தின் இயல்பைக் கூற வேண்டுமோ]

என்னுங்கால் 'கொம்பரை' மறந்திலர்; ஆனால் அவர் கூறவும்வேண்டாவென விடுத்த உலகியல்தான் யாதெனத் தெரியவில்லை. புகழேந்திப்புலவர் பாவையர் கைதீண்ட ஆடவர் பணிவரென்றவாற்றால் கம்பரது கருத்தைப் பிழையாமல் காத்துக்கொண்டனர். திருவிளையாடற்புராண முடையார் வளைக்கையார் வளைப்

பத் தாழ்வாரை விளம்பலுற்றார். அன்னபடி தாழ்பவன்தன் மெய்ப்பாடுகளைப் பரஞ்சோதிமுனிவர் காட்டும்வண்ணம் உற்று நோக்குமிடத்து அவை, வலியோரால் நலிவுண்ட மெலியார்பால் நிகழ்தற்கே பெரும்பாலும் ஏற்றனவா யிருக்கின்றன. பெண்டாட்டி கோட்பட்டான் ஒருவன் நிலையுந்தொழிலும் வனிதையரால் வளைப்புண்ட கொம்பினிடத்தில் காண்கின்றோமேயன்றிக் காதலின் ஊக்கத்தால் தீண்டிய மாத்திரத்தில் பரவசமாகும் பெற்றியை அங்குக் காண்கிலம். பின்னிரண்டடிக ளிவ்வாறாகச் செய்யுளை, இம்பர் வீடளிக்கும் தெய்வமகளிர் இவர் என்னும் கூற்று வம்பன்று என்னக் காட்டவருவார் போல் துவக்குவாராகின்றார். ஒருகால் தடுத்தாட்கொண்டு உம்பர் வீடளிக்கும் தெய்வத்தைப்போல் இவரும் வளைத்தாட்கொண்டு ஆடவர்க்கு இம்பர்வீடளிக்கின்றனர் என்பது முனிவரின் நினைவோ எனின், 'உலகியல் கூறற்பாற்றோ' என்று முடித்தலால் அக்கருத்தும் பொருந்துவது அருமையாயிற்று.

இவ்விதம் முன்னும் பின்னும்இயைதலின்றிநிற்றற்குக் காரணம், கச்சியப்ப சிவாசாரியார்,

மலர்ந்த வாண்முக மங்கையார் நோக்கலும் வறிதாய்ப்
புலர்ந்து நின்றிடு தருக்களும் பொலிவினை யெய்தி
அலர்ந்த வேயெனி னாடவர் தங்களை யன்னார்
கலந்த போதுறு மின்பமார் கட்டுரைத் திடுவார்

[மலர்ந்த ஒளியையுடைய முகமுடைய மங்கையர் பார்த்தவுடன், வறண்டு உலர்ந்து நின்றிருந்த மரங்களும் பொலிவு பெற்று மலர்ந்தன என்றால்—ஆடவர்களை அவர் கலந்த போது உண்டாகும் இன்பத்தின் தன்மையை யாவரால் எடுத்தியம்ப இயலும்]

என்று கந்தபுராணத்துள் பாடியுள இச்செய்யுளையும் அதனோடு இணைத்து நோக்குங்கால் காணலாகும். பரஞ்சோதிமுனிவர், மாதர் கலந்தபோது உறுமின்பத்தைக் கந்தபுராணத்தினின்றும், அவர்கள் தீண்டவே பணியும் வணக்கத்தைக் கம்பர் நூலினின்றும் எடுத்துக்கொண்டு தன் செய்யுளில் ஒன்றாய்ச் சேர்த்ததால் நேர்ந்த குழப்பம் அது. இவ்விரு நூல்களிலும் தருக்களே உதாரணங்களாய் நிற்றலால் கவிபாடும் விரைவில் முனிவர் ஒருசிறிது வஞ்சிக்கப் பெற்றார் போலும்.

கொம்பரென்று கிளைகளைப் பரிகசித்தாரேனும், அடுத்த செய்யுளிற் கம்பர்,

அம்புயத் தணங்கி னன்னா
ரம்மலர்க் கைகள் தீண்ட
வம்பிய லலங்கற் பங்கி
வாளரி மருளுங் கோளார்
தம்புய வரைகள் வந்து
தாழ்வன தளிர்த்த மென்பூங்
கொம்புகள் தாழு மென்றல்
கூறலாந் தகைமைத் தொன்றோ.

[தாமரையில் வசிக்கின்ற இலக்குமிபோன்ற மங்கையர் தம் அழகிய மலர்போன்ற கைகளால் தீண்டவும், வாசனையுடைய மாலையையணிந்த சிகையையும், வாள்போன்ற கொடிய சிங்கமும் அஞ்சும்படியான வலியையும் உடைய ஆடவர்களது மலைபோன்ற தோள்கள் வந்து தாழலாயின. அவ்வாறாக, தளிர்த்த மெல்லிய மலர்களை உடைய பூங்கிளைகள் அம்மாதர் கைபடத் தாழ்ந்து வணங்கின என்பதை எடுத்துக் காட்டுவது தகுதியாமோ]

என்று பரிந்தும் பேசுவார். செய்கையில் இவ்வகை, மடவார் திறத்தாராய ஆடவர்போன்று புரிந்தினவேனும், அப்பொழிலின்கண் உள சில பூங்கொம்புகள் ஆடவர்திறத்து மடவார் பயில்கின்ற தோற்றமும் பெற்றிருந்தன வென்பதைக் கம்பர்,

உலந்தரு வயிரத் திண்டோள்
ஒழுகிவா ளொளிகொண் மேனி
மலர்ந்தபூந் தொடையன் மாலை
மைந்தர்பான் மயிலி னன்னார்
கலந்தவர் போல வொல்கி
யொசிந்தன சிலகை வாராப்
புலந்தவர் போல நின்ற
உளசில பூத்த கொம்பர்

[கல்போன்ற வலிபொருந்திய திண்ணிய தோள்களையும் மிக்க ஒளிவிளங்குகின்ற மேனியையும், மலர்ந்த பூமாலையையும் உடைய ஆடவரிடத்தில் கூடினவரான மயில்போன்ற சாயலையுடைய மாதர்போலச் சில கொடிகள் அசைந்து துவண்டன. சில பூங்கொம்புகள் ஊடல்கொண்ட மாதர்களைப்போல் கைக்கெட்டாமல் நின்றன]

என இனிதின் காட்டலாகின்றனர். ஊடிநின்ற காதலியை வலியடக்கி வளைக்கலாற்றாது பலமுறை இளைத்துப்போய காளைமார்சிலர் தம் பண்டைநாட் பழியைப் புலந்ததுபோலநின்ற இப்பூங்கொம்பர் பாலேனும் தீர்த்துத் தங்கள் குறையினை முடித்துக்கொள்ளக் கருதுவார்போலும். இத்தகையதோர்சித்திரத்தை,

தையலா ளொருத்தி யெட்டா
மலர்க்கொம்பைத் தளிர்க்கை நீட்டி
ஐயநுண் மருங்கு னோவ
வருந்தலு மாற்றாக் கேள்வன்
ஓய்யென விதுவு மென்னை
யூடிய மகளி ரேயோ
கொய்யென வளைத்து நின்றான்
கண்முத்தங் கொழிப்ப நின்றாள்.

[ஒரு பெண் தன்கைக்கு எட்டாத பூங்கொம்பினைத் தனது மாந்தளிர்போன்ற கைகளை நீட்டி, உண்டோ இல்லையோ என்று சந்தேகப்படும்படியான நுண்ணிய இடை வருந்த எட்டி யெட்டிக் களைப்படையவும், அது கண்டு சற்றும் பொறாத அவள் கணவன், விரைந்துவந்து, "என்ன இப் பூங்கொம்பும் ஊடியிருக்கின்ற பெண்ணோமோ...... வேண்டிய மலரைக் கொய்துகொள்" என்று அதனை வளைத்துப் பிடித்துக்கொண்டான். அவளோ கண்களிலிருந்து முத்துக்கள்போல் நீர் உதிர்த்து நின்றாள்]

என்று சண்பகபாண்டியனது நந்தவனம்புக்குத் திளைத்தவர் திறத்தில் பரஞ்சோதிமுனிவர் தீட்டிக் காட்டுகின்றார். "ஊடியமகளிரேயோ" என அவன் இளிவர உரைத்தமாற்றம் கொம்பினைப் பொருந்திற்றேனும் நீடித்தவூடலால் முற்பகல் வருத்தம் பல செய்துள தன்னையே இப்பகல் செவ்விநோக்கித் தகைகின்றானெனத் தேர்ந்ததா லக்காதலி கண்முத்தங் கொழிக்கநின்றாள். "செய்ய நினைத்தேனாயின் மாதராய் நின்னையும் இங்ஙனம் வலிய வளைத்தல் வல்லேன். எனினும் நீ மெல்லியலென்ற பான்மையால் அன்னவாறு செய்தலின்றி நின் ஊடலைத் தணிக்குமாறு வணங்கி வேண்டுவதாயினேன்; அறிதியோ!" என்ன எண்ணினான் என நுனித்த வப்பேதையின் கண்கள் பனித்தல் இயற்கையே. மைந்தனென வணங்கி மங்கையென நிமிர்ந்த தன்மையுறுங் கொம்பர்.



# மலர்வனம்

## காதன் மாதவி

'மாலை வாராராயினும் காலை காண்குவம்' என வயந்தமாலைக்கு இயம்பினளேனும், நயந்த சிந்தையள் நலனழியாக்கையள் கையறு நெஞ்சமொடு பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள் மாமலர் நெடுங்கண் மாதவி முன்னாள். உலக முணர்ந்தபடி இவளோர் முதுக்குடிப்பிறந்த பத்தினிப் பெண்டிரல்லள்; கூத்தியல் கணிகையர் மரபுளாள்; பரத்தைப் புலமையின் சூழ்வினையனைத்துங் கற்றுத்துறைபோயவச் சித்திராபதியின் வயிற்றிற் றோன்றினாள்.' ஆயினும் என்! கொண்டவனை யிவளளவு யாரே காதலித்தார்? தங்கள் நாயகரில் தெய்வம் தவம் பிறிதில்லை என்னும் மங்கைமார் சிந்தையின் தூய்மையை நோக்கி நம்மனோர் தொழுமாறு, நண்பர்காள், புலவர்கள் பற்பலர் புரிந்துளர். மற்று, விலைக்கோட்டுங் கலைகற்ற கணிகைதா னொருத்தி தலைநின்ற காதலால் தன்னையுந் துறந்ததன்மை துறவிய ரசராய இளங்கோவடிகளே தேர்தலுற்றார். நறுந்தாதுண்டு நயனில்காலை வறும்பூத் துறக்கும் வண்டுபோல்பவ ளாதல்போக்கி, வண்டுதுறக்க வாடிய மலரெனலானாள் மாதவி நல்லாள். இன்னவள் முன்னைப் பகல்பல ஊடியுங்கூடியு மகிழ்தருசெவ்வியில் தன் னணிநலப் பொலிவினால் கோவலற் களித்த ஆராத வின்பத்தை யவ் வெட்டிகுமரனே கட்டுரைசெய்ய என்னரு நண்பர்காள், இங்குப் பின்வரும் பெற்றி பரிவுடன் கேண்மினோ:—

திலகமும் அளகமும் சிறுகருஞ் சிலையும்
குவளையும் குமிழும் கொவ்வையும் கொண்ட
மாதர்வாண் முகத்து மதைஇய நோக்கமொடு
காதலிற் றோன்றிய கண்கூடு வரியும்,

[திலகமும் கூந்தலும் சிறிய கரிய வில்போன்ற புருவமும், குவளைமலர் அனைய கண்களும், குமிழம்பூப்போன்ற மூக்கும், கொவ்வைக்கனியன்ன வாயும், தங்கப்பெற்ற அழகிய பிரகாசமான முகத்தில் மதர்த்துக்களித்த பார்வையோடே, ஒருவரும் கூட்டிவைக்காதிருக்கத் தானே அவள் என்முன் தோன்றி மிகுந்த காதலால் முதன்முதல் ப்ரிய தரிசனம் தந்த செய்கையும்]

புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்துக்
கயலுலாய்த் திரிதருங் காமர் செவ்வியில்
பாகுபொதி பவளந் திறந்து நிலாவுதவிய
நாகிள முத்தின் நகைநலம் காட்டி
வருகென வந்து போகெனப் போகிய
கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்,

[மேகத்தைச் சுமந்துவருந்திக் கதிரைப் பொழியும் சந்திரன்போல், கூந்தலோடுகூடிய அவள் முகத்தில் கயல்போன்ற கண்கள் உலவித்திரிந்து விருப்பம் விளைக்கும் அழகினோடே, சர்க்கரைப் பாகுபோன்ற இனியமொழிகள் இருக்கும் பவளம்போன்ற வாய்திறந்து ஒளிதிகழும் முத்தைப்போன்ற பற்களின் அழகைப் புன்முறுவலோடு காட்டினளாய், நான் அழைத்தபோது வந்துஎன்மனம் மகிழ்வுறுவன தந்து பின் நீங்கிய அக்கரிய பெரிய கண்களையுடையவளது ஒழுக்கமும்]

அந்தி மாலை வந்ததற் கிரங்கிச்
சிந்தைநோய் கூருமென் சிறுமை நோக்கிக்
கிளிபுரை கிளவியு மடவன நடையும்
களிமயிற் சாயலும் கரந்தன ளாகிச்
செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்
தொருதனி வந்த வுள்வரி யாடலும்,

[ஊடலால் பிரிந்திருக்கும் வேளையில் அந்திமாலை வந்து சேரவே அதற்கு ஆற்றாமல் நான் மனத்துள் அவத்தைப் படும் சிறுமையைப் பார்த்து அவள், கிளிபோன்ற தன் மொழியையும், மட அன்னம்போன்ற தன் நடையையும், களித்த மயில்போன்ற தன் சாயலையும் மறைத்துக்கொண்டு போர்செய்யும் வேல்அனைய பெரிய கண்களையுடைய தனதுசி லதியர்களில் ஒருத்திபோல் வேடம் பூண்டு என் முன் வந்து நின்ற சூழ்ச்சியும்]

சிலம்புவாய் புலம்பவு மேகலை யார்ப்பவும்
கலம்பெறு நுசுப்பினள் காதல் நோக்கமொடு
திறத்துவே றுயவென் சிறுமை நோக்கியும்
புறத்துநின் றாடிய புன்புற வரியும்,

[அணிகலன்களின் பாரத்தையுந் தாங்கமாட்டாத இடையினையுடைய அவள், காதல் பார்வையுடன் என்பால் வந்தும்அருகு அணையாதவளாக, நான்கலக்கமுற்றுத்தளர்வதை நோக்கினவளாய்க் கைக்கெட்டாமல் அகன்றகன்று சிலம்புகள் வாய்விட்டுப் புலம்பவும், மேகலை சப்திக்கவும், விளையாடியதும்]

கோதையுங் குழலுந் தாதுசே ரளகமும்
ஒருகாழ் முத்தமுந் திருமுலைத் தடமும்
மின்னிடை வருத்த நன்னுதல் தோன்றிச்
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி யுய்ப்பப்
புணர்ச்சியுட் பொதிந்த கலாந்தரு கிளவியின்
இருபுற மொழிப்பொருள் கேட்டன ளாகித்
தளர்ந்த சாயல் தகைமென் கூந்தல்
கிளர்ந்துவே றாகிய கிளர்வரிக் கோலமும்,

[நல்ல நெற்றியை உடையவளாகிய அவள், மாலையும் கூந்தலும் மகரந்தம் செறிந்த மயிர்க்குழற்சியும் ஒப்பற்ற ஒளி பொருந்திய முத்துவடமும் அழகிய முலைகளும் அவளுடைய மின்போன்ற இடுப்பிற்கு வருத்தம் செய்யும்படி என் மனைப்புறம் வந்துதோன்றியும், உள்ளிடம் அணுகாதே, குற்றேவல் செய்யும் சிலதியர் நடுநின்று எம்மிருவருக்கும் சந்து சொல்ல, புணர்ச்சி விரும்பிய யான் அவள் வாராமையால் சலித்துச் செப்பியனுப்பிய மொழிகளைக்கேட்டு நான் புலந்தே சொன்னதாகப் பொருள்கொண்டு பாவித்து, தளர்ந்த மேனியையும் அழகிய கூந்தலையுமுடைய அவள் ஊடலால் அகன்று போகின்ற செய்கையும்]

பிரிந்துறை காலத்துப் பரிந்தன ளாகி
யென்னுறு கிளைகட்குத் தன்னுறு துயரந்
தேர்ந்துதேர்ந் துரைத்த தேர்ச்சிவரி யன்றியும்,

[நான் பிரிந்து வசிக்கின்ற காலத்தில், தான் பிரிவாற்றாது வருந்தினவளாகி என்னுடைய சுற்றத்தாரிடத்தில் தனக்குற்ற துயரத்தை நினைத்து நினைத்துச் சொல்லுபவளாதலும்]

வண்டலர் கோதை மாலையுண் மயங்கிக்
கண்டவர்க் குரைத்த காட்சி வரியும்,

[வண்டுகள்கிண்டி மலர்த்துகின்ற பூவின்மாலையை அணிந்த அவள், மாலைநேரத்தில் மிகவும் மயக்கம் கொண்டனளாய், கண்டவர்க்கெல்லாம் தன் விரகத்தைச் சொல்லிக் காட்டியதும்]

அடுத்தடுத் தவர்முன் மயங்கிய மயக்கம்
எடுத்தவர் தீர்த்த எடுத்துக்கோள் வரியும்,

[அடுத்து அடுத்துத் தான் மயங்கி வீழ்வாளாக, அருகிருந்தோர் எடுத்து அவளைத் தேற்றும்படி செய்துகொண்டதும்]

ஆய இவ்வரிகள் யாவும் கோவலன்மாட்டு மாதவி புரிந்தனள். ஐய, அவை மெய்யே. அவன் மனமெனு மரங்கினில் மீண்டுமிவை நிகழ்ந்தன. ஆயினும் பொல்லாத புன்வினையால் விழாக்கொண்டு அக்கானல்வாய் சென்றநாள் அவ்வியம் புக்குழக்கச் செப்பரிய காதலில் அவள் புரிந்தவை யனைத்தும், "ஆடல் மகளே அவள் ஆதலின் இவ்வகை நடித்தனள்—அவட்கது இயற்கையே" எனச் சிறப்பிலா மாற்றம் கேட்பவர் செவியகஞ் சுட்டுத்தீயச் செப்பவும் நேர்ந்தனன் கோவலன். அத்துணைக் காதலர் இப்பரிசு பேசுதற்கிடைநிகழ்ந்த செய்திதான் யாவதாகுமோவெனின், அது இயம்புதற்கும் இயலாத மிகச் சிறிது. ஒருவர் பாடிய பாட்டிலே மற்றவர் படுபொருள் கண்டாரெனக் கொண்டதால் உற்றதோர் தடுமாற்றம் இது. இவ்விருவருக்கும் இடைநின்று சதிசெய்த அப்பாடல்களின் பரிபவத்தைப் பிற்றைநாள், நண்பர்காள், பகிரங்கமாக்குவோம். அவைதாம் செய்தபிழை பெரிதெனினும் அழகிலும் அருமையானவை. "மதுகரம்"

# கடமை

## ODE TO DUTY by William Wordsworth

ஆங்கிலேயக் கவி வில்லியம் வோர்ட்ஸ் வோர்த் என்பவர், எண்பதாண்டு நிறையாயுள் வாழ்ந்து இற்றைக்கு எண்பதாண்டுகளுக்குமுன் இவ்வுலகத்தை நீத்தவர். இங்கிலாந்தின் ஆத்தான கவியாகச் சிலகாலம் இருந்தனர் என்றால் இவர் பெருமையைச் செப்பவும் வேண்டுமோ! இப்புலமையர், கலகப்புரட்சியிலும் சட்டச் சீர்திருத்தத்திலும் மனிதர் முன்னேற்றமடையக் கூடுமென்று சிறிதேனும் நம்பிக்கைகொண்டிலர். ஒவ்வொருவரும் தத்தம்வரையில் வாழ்க்கையை நடத்துகின்ற வகையிற்றான் மக்கள்தொகுதி உய்வதெனின் உய்யலாகும் என்ற கொள்கையால் பெரியவர். கடமையை முன்னிலைப்படுத்தி அவர் பாடியுள பாட்டொன்று இங்கு மொழிபெயர்க்கப் பெற்றுளது. ஊன்றிப் படிப்பவரன்றி இதன் உறுபொருள் உணரமாட்டார் என உரைத்தன் மிகை.

ஆசிரியர்

கடவுள் குரலிலே பிறந்த வோர்அசைவிலாப் பாவாய்! கடமையே! நன்னெறி நடப்பவர்க்கு நந்தா விளக்கு நீ, தீவழிப்படா நினைப்பவரைத் தகைபவளும் நீ,படர்ந்தாரை இடித்துரைக்குங் கடுங்கோலுமாவாய். வீண்பயமெலாம் இரிந்தகலப் புரிகின்ற வெற்றியும் நீ, விதியும் நீ; நன்மை யொருபுறமும் நசைபோ மறுபுறமுமாய்ப் பேதை மனத்தைப் பிய்த்தலைக்குங்கால் எம்மனோரை விடுவித்து அமைதியளிப்பவள் நீயேயன்றோ. காரிகை நீ இத்தகையள், கடமையெனும் பெயர்பூண இசைந்தனை.

அன்பிலும் வாய்மையிலும் அமர்ந்து தளராத் தம் இளமையின் கிளர்ச்சியே சார்பாக, மாசுறுதலும் ஏசறவுமில்லாத மனத்தின் உவகையராய் நின்பணியென்றறியாரேனும் அதனையே ஆற்றுவாராவர் சிலர். அன்னார், நன்முறை திறம்பா ஒழுக்கத்தினராய்த் தாமிருக்க எக்காலும் நின்பார்வை தம்மேல் நிலைக்கத்தான் வேண்டுமோவென ஐயுற்று வினவுகின்றனர். இத்தகையோர், தளர்வுள்ள கொழுகொம்பைத் திடமென்று பற்றியதால் வழுவித்தான் வீழ நேர்வாராயின், வெய்யவொரு வல்லமைமிகுந்த அணங்கே, நீ யவர்க்குக் கைதந்து காப்பாற்ற வேண்டுகின்றேன்.

அன்புதான் ஒருபோதும் பிழைத்திடாதாயின், இன்பமேநம்மைஇகவாது நிறுத்தவல்ல காப்புமாயின், எங்கள் வாழ்நாள் சிறப்பும் ஒளியுமுற்றுச் சந்தோஷமாக நடக்கும், உண்மையே. வீண்வீர மில்லாமல், இக்கொள்கைக்கிணங்கி ஒழுகுவார், நின்னை வேண்டலராயினும், தூயநெறியே தொடர்பவ ராகலாம். ஆயினும் நீயேசென்று அவ்வவர்க் கவசியமானவளவு தண்டாத நின்னுதவியைத் தந்திடுவாயாக.

சுயேச்சையின்பால் வேணவாக்கொண்ட நான், அடித்த காற்றிற்கெல்லாம் அலைப்புண்ணும் எளிமையனல்லனாயினும், பயிற்சியின்மையால், எனக்கு வழித்துணை என்னுணர்வன்றி வேறொன்றும் வேண்டுவதில்லையென என்னையே எனக்கு யான் முற்றிலும் ஆதாரமாகப் பற்றியவோர் அந்தகனாயினேன்; எனினும், காலமறிந்து நீ இடும் கட்டளைகள் பல என் உள்ளத்தில் கேட்டபோது, எளிய பாதையில் திரிவது தவிர்க்க இசையேனாகி,நின்னுடைய கருமத்தைப் பின்னினி மெய்வருந்தி முயலலாமென நாட்களை மிகப் போக்குவேனாயினேன். இப்பொழுதோ கடமையே, பணித்தியேல் இம்மி இகலாமல் நின்னேவல் தலைநிற்கக் காத்திருக்கின்றேன்.

என்னுடைய ஆன்மா ஏதும் அல்லலுற்றுத் தவிப்பதாலும், மற்றைப் பாதகத் தீமைகள் செய்தவொரு கழிவிரக்கத்தின் வன்மையாலும் அன்று, கடமைத் தெய்வமே, நீ யென்னை ஆட்கொள்ளவேண்டுமென்று இன்று நானுன்னை வேண்டி வணங்குவது. ஆரவமர்ந்து நான் சிந்திக்குங்காலை வரம்பும் விதியுமற்ற இச்சுயேச்சையால் யான் சாலச்சலிக்கின்றேன். ஆங்காங்குப் புகுகின்ற ஆசை ஒன்றிரண்டு எனதுள்ளத்தில் அழுத்துகின்ற பாரத்தை உணர்கின்றேன்; என்னுடைய இச்சையானது இனி ஒன்றுவிட்டு ஒன்று பற்றிப் பெயர்மாற லொல்லாது. என்றென்றும் மாறாத ஒன்றினில் அமைதியுடன் அமர்ந்திருக்க அவாவுகின்றேன்.

காக்கொணா ஆணையோய்,எனினும் நீ முழுமுதற் கடவுளின் திருவருள் தோற்றமே கொண்டுளாய்; நின் அணிவதனத் தலவுமொரு இளநகைக்கு இணையான அழகினை வேறெங்கும் யாம் காண்கிலேம். நின்முன் மலர்களும் தமதோகை விளம்பி நகுகின்றன. நறுமணமும் நின்னடிச் சுவடுபற்றித் தொடர்ந்து நடக்கும்; நாளும் கோளும் தந்நிலை தவறாமல் நீயே காக்கின்றாய்; மிக மிகப் பழைய அவ்விசும்பு, என்றென்றுந் தன் புதுமையும் வலிமையும் நின்னாலேயல்லவோ மாறா திருக்கின்றது.

அளவிறந்த ஆற்றலோய், இன்று நீ சிறியதோர் கருமத்தைக் கைக்கொள்ளுமாறு யானுன்னை அழைக்கின்றேன். இக்கடிகைமுதல் நின் சித்தப்படி நீ உய்த்திடும்வண்ணம், என்னையே யான் நின்பால் ஒப்படைத்துவிட்டேன். அம்மம்ம, என்நொய்மை யினித் தீர்ந்தொழிக! தாழ்மையேன் அறிவுபெற்றேன், சுயநயமற்ற சிந்தையினதூக்கத்தை எனக்குத்தந்தருள்க; பகுத்தறிவை இகவாது பற்றுமொரு உறுதியைக் கொடுத்தருள்வாய்; சத்தியத்தின் சோதியில் நின்னடிமை நானாகி எந்நாளும் வாழ்ந்திருக்க வைக்குமாறு வேண்டுகின்றேன்.


**நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.**

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ள தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிராஞ்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.





**ஏமாங்கதத் திளவரசன்.**

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்,சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.



**கம்பராமாயணம்.**

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.



**முருகன் ஓர் உழவன்.**

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை



**திருக்குறள்**

மூலமும் சொற்குறிப்பு அகராதியும் விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

நூதனம் ! அதிசயம் ! !

துறைந்த விலைக்கு விற்பனை ! ! !

எலெக்டிரிக்

## மேஜை விளக்கு



இந்த விளக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடியதாய்ப் பல்புடனும் மேல் டோமுடனும் இருக்கிறது. ஸ்விட்ச்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலா பக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும் கூட்டங்கள் மத்தியிலும் இந்த விளக்கை வைத்துக் கொண்டால் ஒருவித கஷ்டமுமில்லா திருப்பதோடு மிக அழகாகவு மிருக்கும். மாணுக்கர்கள் மேஜையின் மீது வைத்துப் படிக்கச் சௌகரியமானது. உடனே எழுதுங்கள். இந்தத் தினுசில் சில விளக்குகளே கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூபாய் **4 8 0.**

தபால் செலவு வேறு.

லஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,

173, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | |
|---|---|---|
| பாலகாண்டம் ... ... ரூ. | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் ... | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... ... | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் ... | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... ... | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைவாக்கம், சென்னை.

## குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

## பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

| | | |
|---|---|---|
| விலை, காலிகோ கட்டடம் | ரூபா | **1 4 0** |
| ,, சாதாரண கட்டடம் | ,, | **1 0 0** |

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை ,, 4.

Vali (Do) விலை ,, 4.

**The Educational Publishing Co.,**

**Nungambakam, Madras.**